Registered as a News Paper in Sri Lanka

தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

தினக்கதிர்

ஒளி - 02 - கதிர் -173 11.10.2001 வியாழக்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூபா 6/-

பொருளாதார கிராமியவள அபிவிருத்திவங்கி
களுவாஞ்சிகுடி

மிக விரைவில் மட்டுநகரில் உங்களை நாடுகின்றது. நீங்களும் வாடிக்கையாளராகி பலன்களைப் பெற்றுக் கொள்ளுங்களேன்.

ஜனாதிபதி பொய்யிலே பிறந்து பொய்யிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார் –

(நமது நிருபர்)

ஜனாதிபதி சந்திரிகா அனைத்துக் கடமைகளையும் தன்னுடனேயே வைத்துக் கொண்டு ஆட்சி நடத்த முனைந்தார். ஆனால் அது அவரால் முடியாமல் போய்விட்டது. நேரத்திற்கு எந்த வேலைகளையும் செய்யாத ஜனாதிபதியால் எப்படி நாட்டை சிறந்த முறையில் ஆட்சி செய்ய முடியும்'' என நேற்று எதிர்க்கட்சியுடன் இணைந்து கொண்ட முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க நாடாளுமன்றக் கட்டிடத்தில் வைத்து நேற்று பத்திரிகையாளர் களிடம் பேசும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்: "நானும் என்னை போன்ற அமைச்சர்களும், பிரதி அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடந்த ஆறு ஆண்டு காலமாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் பதவி வகித்து அதன் மூலம் மக்களுக்கு சேவை செய்ய முயற்சிகளைச் செய்தோம்.

இதற்கு முன்பிருந்த அரசாங்கத்தில் ஐந்து ஆண்டு காலமும் தற்போதுள்ள அரசாங்கத்தில் ஓராண்டு காலமும் இருந்தோம். இக்காலகட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க எங்களை எந்தவொரு முடிவையும் எடுக்க இடமளிக்காமல் எல்லா வேலைகளையும் தானே செய்து அரசாங்க நிருவாகத்தைக் குழறுபடி செய்துவிட்டார்.

இதனால் மக்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்தனர், பொருளாதாரத்துறை வீழ்ச்சி கண்டது, தொழிற்சாலைகள் மூடு விழாக் கண்டன, வர்த்தகர்கள் நாட்டை விட்டுச் சென்றனர், வெளி நாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைக்குவர அஞ்சினார்கள் அத்துடன் நாட்டில் சட்டமும் ஒழுங்கும் மறைந்து வன்செயல்கள் அதிகரித்து பாதாள உலகம் தலைதூக்கியது.

அத்துடன் நாட்டின் பிரதான பிரச்சினையான போர் நிலைமை மேலும் மோசமடைந்தது.

ஜனாதிபதிக்கு எப்போது (8ம் பக்கம் பார்க்க)

நேற்று நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் முன்னாள் அமைச்சர்கள் மகிந்த விஜேசேகர, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், எஸ்.பி.திஸநாயக்க.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது

நாடாளுமன்றம் நேற்ற நள்ளிரவுடன் கலைக்கப்பட்டது. அரசு கவிழ்வதை தவிர்க்கும் வகையில் நேற்று நள்ளிரவு நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதேவேளை எதிர்வரும் டிசம்பர் மாதம் 5ம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறுமெனவும் ஒக்டோபர் 20 திகதி தொடக்கம் 27வரை வேட்பு மனுத்தாக்கல் செய்ய முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வயதுக் குழந்தைகளும் இன்று சிறைகளில் வாடும் பரிதாப நிலை

–செல்வம் எம்.பி–

(நமது நிருபர்)

வடக்கு கிழக்கைச் சேர்ந்த பல தமிழர்கள் தங்கள் குழந்தைகளுடன் பல வருடமாக சிறைசாலையில் வாடுகின்றனர். பல பெண்கள் சிறைகளிலேயே குழந்தைகளைப் பிரசவிக்க வேண்டிய பரிதாபகர மான நிலையில் வாழ்கின்றனர்.

இவ்வாறு வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் செவ்வாய்க் கிழமையன்று பாராளுமன்றத்தில் பிணை திருத்தச் சட்ட மூலம் தொடர்பான விவாதத் தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த பல நூற்றுக் கணக்கான தமிழர்கள் பயங்கர வாதத் தடைச்சட்டம் அவசரகால விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டு பல வருடமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விசாரணை செய்து விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவில்லை.

ஒருவர் கைது செய்யப் பட்டால் ஒருவருட காலத்துக்குள் அவர் குற்றவாளியா அல்லது குற்றமற்றவரா என்பதை நீதி மன்றின் முன் நிறுத்தி விசாரணை செய்ய வேண்டும். ஆனால் வடக்கு கிழக்கில்

(8ம் பக்கம் பார்க்க)

மாவட்ட செயலக கெடுபிடிகளால் மட்டக்களப்பில் மக்கள் அவதி

செய்தி

அவதி,அகதி எல்லாம் இந்த நாட்டிலதமிழனுக்குத்தானே.....

கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் பெண்கள் எழுச்சி தினம்

(நமது நிருபர்)

தமிழீழப் பெண்கள் எழுச்சி தினம் மட்டக்களப்பு மாவட்டத்தின் படையினர் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் நேற்று இடம் பெற்றன.

சந்திவெளி கிரான் வந்தாறுமூலை போன்ற கிராமங்களில் பெண்கள் எழுச்சி தினம் தொடர்பான சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டிருந்தன. அத்துட

(8ம் பக்கம் பார்க்க)

திருமலை விமானப்படை முகாம் தாக்கி அழிப்பு நான்கு படையினர் பலி,17பேரைக் காணவில்லை

(திருமலை நிருபர்),

திருகோணமலை வெல்வேரிக்குளம் விமானப் படை முகாம் மீது செவ்வாய் இரவு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் நான்கு படையினர் கொல்லப்பட்டும் பதினேழுபேர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் படை முகாமிலிருந்து ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றியதுடன் முகாமையும் தாக்கி அழித்துள்ளனர்.

திருமலை அனுராதபுர வீதியில் கன்னியாவுக்கு ஒரு மைல் தொலைவில் வெல்வேரிக்குளம் விமானப் படை முகாம் உள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

படுவான்கரையில் மகளிர் எழுச்சிப் பேரணி புலிக்கொடி ஏந்தி மாணவர்கள் ஊர்வலம்

(நமது நிருபர்)

கொக்கட்டிச்சோலைப் பகுதியில் நேற்று தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் அனுஷ்டிக்கப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் இரண்டாவது லெப்ரினட் மாலதியின் நினைவு நாளான நேற்றுக் காலை அரசடித்தீவு பொது விளையாட்டரங்கில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மகளிர் படையணித் தலைவி சாளியா விடுதலைப் புலிகளின் கொடியை ஏற்றி வைத்தார்.

மாலை மூன்று மணிக்கு எழுச்சிப் பேரணி அரசடித்தீவு மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திலும் பட்டிப்பளை சந்தியில் இருந்தும் ஆரம்பமாகி அரசடித்தீவு பொது விளையாட்டு மைதானத்தை வந்தடைந்தன.

பாடசாலை மாணவர்களின் வேன்ட் வாத்திய இசையுடன் புலிக் கொடி ஏந்திய மாணவர்கள், சிவப்பு நிறச்சேலை அணிந்த பெண்

(8ம் பக்கம் பார்க்க)

கட்டிடம் வாடகைக்கு

அரச திணைக்கள, அரச சார்பற்ற திணைக்களங்களின் காரியாலயத்துக்கு தகுந்த சகல வசதிகளும் பொருந்திய வாழைச்சேனை, மட்டக்களப்பு பிரதான வீதியில் உள்ள கோறளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான இரண்டு மாடிக் கட்டிடம் வாடகைக்கு விடப்படவுள்ளது.

கட்டிட வாடகை சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு கீழ் குறிப்பிடும் முகவரிக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்/பொது முகாமையாளர்
கோறளை. ப.நோ.கூ.சங்கம்
வாழைச்சேனை.

தொ.பே.இல:- 065-57224 Advt

தினக்கதிர்

த.பெ. இல: 06
155, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 22554
E-mail :- tkathir@snet.lk

மக்கள் சேவையே மகேசன் சேவை!

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச திணைக்களங்களில் தேவகைளின் நிமித்தம் செல்லும் பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

படையினரின் சோதனைக் கெடுபிடிகள் அலுவலக அதிகாரிகளின் அணுகுமுறைகள் என்பன மக்களை சங்கடப்படுத்துகின்றன.

குறிப்பாக மட்டக்களப்பு நகரில் இயங்கும் மாவட்டச் செயலகம், நீதி மன்றத் தொகுதி, மண்முனைப் பற்று பிரதேச செயலகம் மற்றும் அரச அலுவலகங்களுக்கு செல்வோர் படையினரின் சோதனைகளுக்கு முகம் கொடுத்தே செல்லும் பரிதாப நிலை காணப்படுகிறது.

இவற்றில் மாவட்டச் செயலகத்துக்கு செல்லும் பொது மக்களே கடும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நகரின் உள்நுழை வாயிலாகக் கருதப்படும் கோட்டைமுனைப்பாலம், புதுப்பாலம், புதூர் பாலம் ஆகியவற்றில் படையினர் தீவிர சோதனைகளை மேற் கொண்டே நகருக்குள் பொது மக்களை அனுமதிக்கின்றனர். அவ்வாறான ஒரு நிலையில் மாவட்டச் செயலகத்துக்கு செல்லும் நூழை வாயில்களிலும் சோதனைக் கெடுபிடிகள் தேவை தானா?.

போர்ச் சூழலில் வாழும் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் மாவட்டச் செயலகத்தை அணுகுகின்றனர்.

வாக்காளர் பிரித்தெடுப்புச் சான்றிதழ், காணி உறுதி சம்பந்தமான விடயங்கள் மற்றும் அரச அதிபரோடு சம்பந்தப்பட்ட விடயங்களுக்காகவும் நாடுகின்றனர்.

இங்கே சோதனையும், அரச அதிகாரிகளினால் ஏற்படும் வேதனையும் அணுகி வரும் பொதுமக்களை அவலப்படுத்துகி றது.

இவ்விடயத்தில் அரச அதிபரின் பங்கு மிக பொறுப்பு வாய்ந்ததொன்றாகும். கடந்த காலங்களில் மாவட்டச் செயலகத்தில் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சி னைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டியதுடன் சோதனைகளும் தளர்த்தப்பட வேண்டும்.

இது விடயத்தில் புதிய அரச அதிபர் கவனம் செலுத்தி தீர்வு காண வேண்டும் என்பதே அனைவரது அவாவாகும்.

இது ஒரு புறமிருக்க மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலுமுள்ள அரச திணைக்களங்களிலும் பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அத்துடன் ஒரு காரியத்தை முடிக்க மாதக் கணக்கில் அலைந்து திரிகின்றனர்.

சிலர் அலைந்து அலுத்து கைவிட்ட விடயங்களும் உண்டு. இவ்வாறான ஒரு நிலமை தொடர்கதையாகக் கூடாது.

மக்களின் தேவை எது என்பதை அறிந்து அது சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு தீர்வுகாண வேண்டியது அதிகாரிகளின் கடமையாகும். இவ்வாறு தீர்வு காணப்பட்டால் அலுவ லகங்களில் அலையும் நிலை ஏற்படாது.

இதே வேளை கடந்த மாதம் மாவட்டத்தில் இடம் பெற்ற இடம்பெயர் சேவை மக்களின் பிரச்சினைகளுக்கு திருப்தி தரக் கூடிய தீர்வாக அமையவில்லை.

தேசிய அடையாள அட்டை,காணி உறுதி,பிறப்பத் தாட்சிப்பத்திரம்போன்ற விடயங்களே ஆராயப்பட்டன. முக்கியமான மரணச்சான்றிதழ். வன்செயலினால் இறந்தவர்களுக்கான புனர்வாழ்வுக்கொடுப்பனவு போன்ற விடயங்கள் தீர்க்கப்படவில்லை. இவ்விடயங்கள் தீர்வு காணப்பட வேண்டும். அரச அதிகாரிகள் வெறும் அலுவலகப் பணியாளராக கடைமையை செய்யாது மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் அந்தத் தீர்வினை பெற்றுக்கொடுக்கும் அனைத்து வழிமுறைகளிலும் நின்று பணிபுரிய வேண்டும். அதுவே மக்கள் தொண்டாக அமையும்.

''மக்கள் சேவையே மகேசன் சேவை'' என சுவாமி விவேகானந்தரின் அமுத வாக்குக்கமைய அரச அலுவலர்கள் உணர்ந்து பணி தொடர்வதே இன்றைய கடமையாகும்.

திருத்தம்பலகாம களத்து மேட்டில் உருவாகிய புதிய தமிழ் மொழி

பலவருட காலமாகத் தம்பலகாமத்திலே தங்கி கோயில் நிர்மாணிப்பு,குள அமைப்பு, வயல்வெளித் திருத்தம் போன்ற பல வேலைகளைக் கவனித்து வந்த குளக்கோட்டு மன்னன் தன் தாயகமான தஞ்சையை மனத்தில் கொண்டே தம்பலகாமத்தைச் சிருஷ்டித்தான் என்று ஒரு கர்ண பரம்பரை கூறுகிறது. பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் இந்த ஊருக்கு வருகை தந்த தென்னிந்திய ஹார்மோனிய வித்துவான் சின்னையா சாய்பு அவர்கள் இந்த ஊரைப் பார்க்கும் போதெல்லாம் என் தாயகமான தஞ்சையே நினைவுக்கு வருகிறது என்று கூறியது மேற்படி கர்ண பரம்பரைக் கதையின் கூற்றை ஊர்ஜிதம் செய்வதாக உள்ளது.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள திருகோணமலைக்குத் தெற்கே பதின்மூன்று மைல் தூரத்திலுள்ள மருத நிலப் பிரதேசமான தம்பலகாமத்துக்கு நீண்ட வரலாறு உண்டு. ஆரிய இளவரசனான சிங்கபாகுவின் மகன் விஜயன், என்று இலங்கையில் காலடி வைத்தானோ அன்றிலிருந்தே தமிழ் நெற்செய்கையாளர்களின் பாரம்பரிய தாயகமான தம்பலகாமத்தின் வரலாறும் துவங்கத் தொடங்கி விட்டது. கிமு.543 புத்த தேவர் நிர்வாண தசை அடைந்த நாளில் தோழர்களுடன் இலங்கை வந்த விஜயன்,இயக்கர் குலக் கொடியான குவேனியுடன் நட்புறவு கொண்டு அவளின் உதவியுடன் இலங்கையின் பூர்வீக ஆட்சியாளரான இயக்கரையும், நாகரையும் படிப்படியாக வென்று இலங்கை முழுவதற்கும் ஏக சக்கரவர்த்தியாக முடி சூடிக்கொண்டதுடன் தன் இராஜ்யத்தைப் பாதுகாக்கத் தீவின் நான்கு திசைகளிலும் சிவ, முருக ஆலயங்களை அமைத்தான். வடக்கே இன்று நகுலேஸ்வரம் என்று அழைக்கப்படும் சிவாலயத்தையும், தெற்கே தெய்வத்துறையில் சந்திரசேகரர் ஆலயத்தையும், கிழக்கே தம்பலகாமத்தில் கோணேஸ்வரத்தையும், கதிர்காமத்தில் கந்த வேளுக்கு ஒரு ஆலயத்தையும், அமைத்தான் என சிங்கள வரலாற்று நூலான மகாவம்சமும் செ.ராசநாயக முதலியார் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரமும் கூறுகின்றன. அன்றிலிருந்து தம்பலகாமத்தின் பெயர் சரித்திர ரீதியாகத் துலங்குவதைக் காணலாம். தம்பலகாமத்தில் விஜயன் கட்டிய கோணேஸ்வரர் ஆலயம் நீண்ட காலப்பகுதியில் கவனிப்பின்றி அழியத் தொடங்கி இருந்தது. தந்தையான வரராம சோழன் திருகோணமலையில் கட்டிய கோணேஸ்வரத்தை தரிசிக்க வரராம சோழனின் மகன் சோழங்கன் அல்லது குளக்கோட்டன் என்னும் இளவரசன் மந்திரி பிரதானிகளுடன் திருமலை வந்து கோணேஸ்வரத்தைத் தரிசித்துக் கொண்டு இருந்த போது அடுத்துள்ள தம்பலகாமத்தில் ஒரு பெரிய ஆலயம் அழிந்து கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டு சாலிவாகன சகாப்தம் 358ம் வருடம் கி.பி435 இல் தன் பரிவாரங்களுடன் அங்கு விரைந்து தந்தையான வரராம சோழனைப் போல் தானும் ஒரு பெரும் ஆலயத்தை அமைக்க வேண்டும் என்ற ஆசை உடையவனாக இருந்தவனாதலால் விஜய மன்னனால் கட்டப்பட்டுப் பழுதுற்ற ஆலயத்தை முற்றாக நீக்கிப் புதுக் கட்டி கொண்டிருந்த வேளை தெற்கில் இருந்து ஆட்சி செய்த பாண்டு மகாராசாவின் இராணி தம்பலகாமத்துக்கு ஒரு பெரும் படையை அனுப்பி அங்கு கோயில் கட்டும் தமிழ் அரசனை நாடு கடத்துமாறு உத்தரவிட்டாள் அவர்கள் வந்து குளக்கோட்டன் செய்யும் பெரும் திருப்பணியைக் கண்டு அதிசயித்து நின்றனர். ஏன் வந்தீர்கள் என்று அரசன் வினவிய போது உங்களுக்கு உதவி செய்யுமாறு எங்களை அரசி அனுப்பினாள் என்று கூறினர்.

அவர்கள் கூற்றைக் கேட்டு மகிழ்ந்த மன்னன் உங்கள் சேமலாபங்களை விசாரித்தேன் என்று உங்கள் இராணியிடம் கூறுங்கள் என்று அவர்களுக்கு விருந்து வைத்து அனுப்பி வைத்தான் என்று மயில்வாகனப் புலவர் எழுதிய யாழ்ப்பாண வைபவ மாலை கூறுகிறது. பின் கோயிலை நல்லமுறையில் கட்டி முடித்து அந்த ஆலயத் தாபரிப்புக் கருதி தம்பலகாமத்தில் ஐயாயிரம் ஏக்கருக்கு மேல் வயல் வெளிகளைத்திருத்தி அவ்வயல் வெளிக்கு நீர் பாய கந்தளாயில் பெரிய குளத்தையும் அமைத்த மன்னன் இந்த வயல் வெளிகள் நன்றாய் விளைந்து வருமானம் போதியதாகக் கிடைத்தால் தான் ஆலயம் குறைவின்றி நடைபெறும். நெற்செய்கை சிறக்க ஒரு சமயம் மழையும் இன்னொரு சமயம் வெயிலும் வேண்டும் மிக உயர்ந்த பிரம்ம நிலையில் எழுந்தருளி சிவாலயங்களிலுள்ள இறைவனிடம் பக்குவ நிலையிலுள்ளவர்கள் வீடுபேற்றைக் கோர முடியுமேயன்றி மழை, வெயில், பொன், பொருள் போன்ற உலகப் பொருள்களைக் கோரிப்பெற முடியாதே. என்ன செய்வது என்று மன்னன் ஆலோசனையில் ஆழ்ந்திருந்த சமயம் கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல் அரசனின் குலகுருவான வசிட்ட மகாரிஷி அங்கே வந்தார். குருவைக் கண்டு மகிழ்ந்த குளக்கோட்டன் அவர் அடி தொழுது, வேண்டும் போது உமாபங்கரிடம் விவசாயிகள் வெயில் மழையைக் கேட்டுப் பெறக்கூடிய ஒரு வழிபாட்டு முறையை ஆக்கித் தருமாறு வேண்டினான். மன்னனின் வேண்டுதல் அருந்ததி கேள்வனைப் பலநாள் சிந்திக்க வைத்தது.

அன்புடன் இரக்கும் வேத்தை
அருந்ததி கொழுணனன்
நோக்கி
இன்புடன் ஆசி கூறி நீ எண்
ணிய படியாமென்னா
என்றருள் புரிந்து தெய்வ
நாயகன் தன்னைப் போற்றி
இன்பமுற்றுயிர்கள் வாழ
வழிமுறை வகுத்து ஈந்தான்.

(திருகோணாசலப்புராணம் தம்மை நகர்ப்படலம்)

ஆகமங்களில் தலையானதும் சிவாலய உலகில் நடைமுறையில் இல்லாததுமான மகிடாகமக் கிரியைகளிலான வழிபாட்டு முறையை முனிவர் மன்னனுக்கருளினார். திருமலைக் கோணேஸ்வரத்திலும் மற்றும் சிவாலயங்களிலும் கோயிலுள் நடைபெறும் பூசை, அபிஷேகம், ஆண்டு உற்சவ விழா போன்ற உருவ வழிபாடே நடைபெற்று வருகின்றன. ஆனால் தம்பலகாமம் கோணேஸ்வர ஆலயத்தில் சிவாலய வழிபாட்டுக்கு வித்தியாசமான முறையில் உருவ, அருவ வழிபாடாக இரு பிரிவான வழிபாடுகள் இடம் பெறுகின்றன. இந்த ஆலயத்தில் கோயிலுள் நடைபெறும் பூசை, அபிஷே கம் ஆண்டு உற்சவ விழா போன்ற வைகள் உமா சமேதரான கோ ணேஸ்வரருக்கும் பரிவார தெய்வ ங்களுக்கும் பெரும் உருவ வழிபா டுகளாகும். ஆலய ஆண்டு மையமாகக் கொண்டு ஆண்டுக் கொன்றாக நடைபெற வேண்டிய நியதி உடைய கந்தளாய்க் குளத்து மகா வேள்வி, நெருஞ்சித்தீவு வேள்வி தம்பலகாமம் நாயன்மார் திடல் மடை வைபவம், கள்ளி மேட்டுப் பத்தினித்தேவி விழா, மகாமம் மூர்க்காம்பிகை விழா போன்றவைகள் லட்சுமி நாராயணனுக்கும் காவல் தெய்வங்களுக்கும் திறந்த வெளி வழிபாட்டு இடங்களில் கோணேஸ்வரர் ஆலயத்தால் பல லட்சக் கணக்கான ரூபாய்கள்

தம்பலகாமம் வேலாயுதம்

செலவிட்டு நடத்தப்படும் அருவ வழி பாட்டுச் சுற்று ஆராதனைகளாகும்.

காய்ச்சலுக்கு ஒரு மருந்து, தலையிடிக்கு ஒரு மருந்து. வயிற்று வலிக்கு வேறொரு மருந்து என்று வைத்திய சாஸ்திரம் கூறுவது போல் வெயிலை வரவழைக்க, மழையை வரவழைக்க, பெரு மழையை வரவழைக்க, தொடர் மழை பெய்து கந்தள[illegible] உடை[illegible]துக்கொ[illegible] த்தைக் [illegible]க்க[illegible]னக் கோணே[illegible]

தம்பலகாமம் கோணேஸ்வர ஆலயத்தில் சிவாலய வழிபாட்டுக்கு வித்தியாசமான முறையில் உருவ, அருவ வழிபாடாக இரு பிரிவான வழிபாடுகள் இடம் பெறுகின்றன.

வர வழிபாட்டில் பலவிதமான ஆராதனை முறைகள் உள்ளன. நாற்பதேக்கர், இருபதேக்கர், பதினைந்தேக்கர், பத்தேக்கர், ஐந்தேக்கர், மூன்றேக்கர், இரண்டேக்கர், என்று கோயிலில் இருந்து வயல் மானியம் பெறும் தொழும்பாளர்களும் மாதச் சம்பளம் பெறுபவர்களுமாக சுமார் நாற்பது தொழும்பாளர் குடும்பங்கள் வரை திருகோணமலை மாவட்டம் முழுவதும் பரந்து வாழ்ந்து வருகின்றனர்.

தஞ்சையைப் போல் ஊர்

பல வருட காலமாகத் தம்பலகாமத்திலே தங்கி கோயில் நிர்மாணிப்பு, குள அமைப்பு, வயல்வெளித்திருத்தம் போன்ற பல வேலைகளைக் கவனித்து வந்த குளக்கோட்ட மன்னன் தன் தாயகமான தஞ்சையை மனத்தில் கொண்டே தம்பலகாமத்தைச் சிருஷ்டித்தான் என்று ஒரு கர்ண பரம்பரை கூறுகிறது. இரண்டாயிரத்தைந்நூறு வருடங்களுக்கு முன் இலங்கை வந்த விஜயமன்னன் கிழக்குப் பகுதிக் காவல் ஆலயமாகத் தம்பலகாமத்தில் கோணேஸ்வரத்தை அமைத்த போதும் ஊர் இருந்தது, ஆயினும் அழகான ஊராக மாற்றியமைத்தவன் குளக்கோட்ட மன்னனே என்று அறிய முடிகிறது. பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் இந்த ஊருக்கு வருகை தந்த தென்னிந்திய ஹார்மோனிய வித்துவான் சின்னையா சாய்பு அவர்கள் இந்த ஊரைப் பார்க்கும்போதெல்லாம் என் தாயகமான தஞ்சையே நினைவுக்கு வருகிறது என்று கூறியது மேற்படி கர்ண பரம்பரைக் கதையின் கூற்றை ஊர்ஜிதம் செய்வதாக உள்ளது.

(தொடரும்)

சென்ரல்கேம்ப் கொலைச் சந்தேக நபர்கள் மூவரும் வழக்குத் தவணைகளுக்கு மன்றில் ஆஜராக வேண்டும்

சட்டத்தரணி பேரின்பராஜாவின் வாதம் மன்றில் ஏற்பு!

(காரைதீவு நிருபர்)

கடந்த 24-09-1997 இல் இடம்பெற்ற சென்ரல்கேம்ப் தமிழ்க் கிராமம் மீதான தாக்குதல் சம்பவத்தில் கொலைச் சந்தேக நபர்களாக இனங்காணப்பட்ட 3 பொலிஸாரும் ஒவ்வொரு வழக்குத் தவணைக்கும் மன்றில் ஆஜராக வேண்டும்.

இவ்வாறு சென்ரல் கேம்ப் கிராம தாக்குதல் தொடர்பான அடையாள அணிவகுப்பு வழக்கில் மனித உரிமைகள் இல்லம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு சார்பில் வாதாடிய சிரேஷ்ட சட்டத்தரணி எம்.கே.பேரின்பராஜா நீதிபதியைக் கேட்டுக்கொண்டார். சென்றல் கேம்ப் தமிழ் குடியிருப்புப் பகுதிகளில் 24-09-97 இல் புகுந்த பொலிஸார் அக்குடியிருப்புக்களில் 47 வீடுகளை தீக்கிரையாக்கிய துடன் 5 பொது மக்களையும் படு கொலை செய்தனர்.

பிரஸ்தாப வழக்கு கடந்த செவ்வாய் கல்முனை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி கே.கணபதிப்பிள்ளை முன்நிலையில் நடைபெற்றது.

அன்று இடம்பெற்றிருந்த அடையாள அணிவகுப்பு சென்ரல் கேம்ப் பொலிஸார் தயாராக இல்லாததால் எதிர்வரும் 20-11-2001 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப் பட்டது.

சென்ரல் கேம்ப் பொலிஸ் நிலையத்தாக்குதலின் பின்பு முதலாவது நடைபெறும் வழக்கு விசாரணை இதுவாகும்.

தாக்குதலில் கொலைச் சந்தேக நபர்களான காமினி குமார சிங்க, விமல் வசந்த குமார, ஜே.என்.கருணாரத்ன ஆகியோர் மன்றில் ஆஜராகியிருந்தனர். இவர்கள் பொலிஸ் சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டவர்களாவர்.

பொலிஸார் சார்பாக சட்டத்தரணி றக்கீப் ஆஜராகி மன்றில் வாதாடினார்.

சந்தேக நபர் மூவரும் நீதிமன்ற கட்டளை வரும் போது மட்டும் மன்றில் ஆஜராகினால் போதுமானது. அதற்கு மன்று அனுமதியளிக்க வேண்டும் என்று கேட்டார். அதற்கு பதில்வாதம் புரிந்த சட்டத்தரணி பேரின்பராஜா இவர்கள் கட்டாயம் தவணைகளுக்கு சமூகமளிக்கவேண்டும் என்று வாதிட்டார். இவரது வாதம் மன்றில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

வாக்குமூலம் பெறப்படவில்லை!

சென்றல் கேம்ப் தாக்குதலில் சம்பந்தப்பட்டு இது வரை இனங்காணப்பட்ட மூன்று சந்தேக நபர்களிடமிருந்தோ, சாட்சிகளிடமிருந்தோ இது வரை வாக்கு மூலங்களைப் பெறவில்லை.

சென்றல் கேம்ப் பொலிஸார் எந்த வாக்கு மூலங்களையும் பெறவில்லையென்பது மன்றில் சுட்டிக்காட்டப்பட்டது. அதே போன்று சட்ட மா அதிபருக்கும்,பொலிஸ் மா அதிபருக்கும் அனுப்பப்பட்ட கடிதங்களுக்கு இன்னும் பதில் அறிக்கை கிடைக்கப்பெறவில்லை. இதனாலும் வழக்கு தாமதமடைய வேண்டியுள்ளது.

24-09-97 இல் இடம்பெற்ற தாக்குதல் கொலை, தீ வைப்புச் சம்பவம் தொடர்பாக இன்று வரை வழக்கு இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வருகிறது.

சுதந்திரக்கட்சி உடுப்பிட்டி அமைப்பாளர் உயிரிழந்த நெல்லியடி சூட்டுச் சம்பவம் ; சிப்பாய்க்கு விளக்கமறியல்

கரும்புலிகள் தினமான கடந்த ஜூலை ஐந்தாம் திகதி இரவு நெல்லியடி நகரப் பகுதியில் இடம் பெற்ற குண்டுவெடிப்பு மற்றும் துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உடுப்பிட்டித் தொகுதி அமைப்பாளர் கொல்லப்பட்டது தொடர்பாக இராணுவச் சிப்பாய் ஒருவர் நெல்லியடிப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பான மரண விசாரணை கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் மரணமடைந்தவரின் உடலில் ஏற்பட்ட காயங்களிலிருந்து அதிக அளவு இரத்தம் வெளியேறியதாலேயே மரணம் சம்பவித்துள்ளதாக பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி தனது வைத்திய அறிக்கையில் குறிப்பிட்டிருந்ததைக் கருத்திற் கொண்ட நீதிவான், துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்ட படையினரைக் கைது செய்ய உத்தரவிட்டார். இதனை அடுத்து பருத்தித்துறைப் பொலீஸார் அன்றையதினமே லான்ஸ் கோப்ரல் ஜீ.எம்.பிரேமரத்தின என்ற இராணுவச் சிப்பாயைப் பொலீஸார் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

சந்தேகநபரை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இராணுவ அதிகாரி நீதிமன்றில் மனு ஒன்றைச் சமர்ப்பித்ததையடுத்து சந்தேகநபரை பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்க நீதிவான் அனுமதியளித்தார். நெல்லியடியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் துன்னாலை கோவில் கடவையைச் சேர்ந்த மயில்வாகனம் ஜெயக்குமார் என்னும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உடுப்பிட்டித் தொகுதி அமைப்பாளர் பலியானது தெரிந்ததே.

இராமேஸ்வரம் சென்ற14 ஈழ அகதிகள்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 14 ஈழ அகதிகள் செவ்வாய் காலை இராமேஸ்வரம் வந்தடைந்ததாக தமிழக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஐந்து பெண்களும், மூன்று குழந்தைகளும் அவர்களில் அடங்குவர்.

இராமேஸ்வரத்தில் வைத்து விசாரணை செய்த தமிழக அதிகாரிகள் பின்னர் அவர்களை மண்டபம் முகாமுக்கு அனுப்பி வைத்தனர்.

இளைஞர் சுட்டுக்கொலை

அப்பையா கடைச்சந்தியில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் இளைஞர் ஒருவர் இனந் தெரியாதொருவரினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஸ்ரீகந்தராசா விமலேஸ்வரன் (19) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வீதி போக்குவரத்து கண்காணிப்புப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இவர் ஈ.பி.டி.பி.யினால் நியமிக்கப்பட்ட வீதிப் போக்குவரத்துத் தொண்டர் சேவையைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கல்குடா வலயப் பாடசாலைகளின் கல்வி நிலை வீழ்ச்சி

(ருத்ரா)

அண்மையில் பயிலுனர் ஆசிரியர்களாக கல்குடா வலய பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்கவென 16 ஆசிரியர்கள் வடக்குக் கிழக்கு மாகாண சபையின் கல்வி கலாசார பண்பாட்டலுவல்கள் அமைச்சு நியமித்தது. இவர்களில் 8 பேர் மட்டுமே இப்பாடசாலைகளுக்கு சமூகமளித்து வருவதாகவும் ஏனையோர் இற்றை வரை கற்பிக்க வரவில்லை எனவும் தமக்குள்ள தனிப்பட்ட பலத்தைப் பயன்படுத்தி தமக்கு வசதியான பிற பாடசாலைகளுக்கு சென்று விட்டதாகவும் தெரிய வருகிறது

குறிப்பாக வாழைச்சேனை இந்துக்கல்லூரிக்கென நியமிக்கப்பட்ட ஆசிரியை ஒருவர் தனது கடமையைப் பொறுப்பேற்ற ஒரு சில தினங்களில் ஏறாவூர் பாடசாலை ஒன்றுக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். இதே போன்று கிண்ணையடி, வாகரை போன்ற பிரதேசங்களுக்குரிய ஆசிரியர்களும் சமூகமளிக்கவில்லை எனத் தெரிய வருகிறது.

வாகரையில் 15 பாடசாலைகளில் நான்கு பாடசாலைகளில் சாதாரண தரம் வரை உள்ளது ஆனால் இது வரை ஒரு நிரந்தர ஆசிரியர்கள் கூட இல்லாத ஒப்பந்த ஆசிரியர்கள் சிலரே இப்பாடசாலைகளில் கடமையாற்றுகின்றனர். இதுவரை வாகரைப் பகுதிப் பாடசாலைகளில் எவருமே ஆங்கிலத்தில் சித்தியெய்தவில்லை என ஆசிரிய ஆலோசகர் ஒருவர் தெரிவித்தார்.

கூட்டுறவு சங்கங்கள் பற்றிய கருத்தரங்கு

(கல்லாறு நிருபர்)

கல்குடா வலய கல்விப் பணிமனைக்குட்பட்ட உயர் வகுப்பு மாணவர்களுக்கான, பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கும், மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவு சபையின் வெளியீடான 'இணைகரம்' மாணவர் சிறப்பிதழ் அறிமுக விழாவும் எதிர்வரும் 15ம் திகதி நடைபெற இருக்கின்றது.

கல்குடா வலய கல்விப் பணிமனைக்குட்பட்ட வாழைச்சேனையைச் சூழவுள்ள பாடசாலைகளுக்கு காலையில் ஓட்டமாவடி தேசிய கல்லூரியிலும், செங்கலடியைச் சூழவுள்ள பாடசாலைகளுக்கு செங்கலடி மத்திய கல்லூரியில் பிற்பகலிலும் மேற்படி நிகழ்வுகள் இடம் பெற இருக்கின்றன.

ஆலய புனர் நிர்மாணம்

(கல்லாறு நிருபர்)

கிழக்கில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஒரே ஆலயமான குருக்கள் மடம் ஐயனார் ஆலயம் துரிதமாக புனரமைக்கப்பட்டு வருகின்றது.

புதுப் பொலிவு பெற்று வரும் இவ் ஆலயத்தின் கும்பாபிஷேகம் இவ்வருட இறுதிக்குள் நடைபெற இருப்பதாக மேற்படி ஆலய செயலாளர் மா.திருநாவுக்கரசு தெரிவித்தார். அத்துடன் ஆலய புனரமைப்பிற்கு பக்தர்கள் போதியளவு நிதியுதவி அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். ஏனைய ஆலயங்களை போலல்லாது ஐயனார் ஆலயம் கிழக்கில் அரிதாகவே காணப்படுகிறது.

இரு மிதிவெடிச் சம்பவங்கள்; தென்மராட்சிப் பகுதியில் இருவர் கால்களை இழந்தனர்

தென்மராட்சிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இரு மிதிவெடிச் சம்பவங்களில் இருவர் தமது கால்களை இழந்தனர்.

சரசாலை தெற்கைச் சேர்ந்த கதிரன் நாகமுத்து (வயது 64) என்பவர், கல்வயல் பகுதியில் கொப்பறா பொறுக்கச் சென்ற சமயம் சாவகச்சேரியைச் சேர்ந்த சிவராஜா சிவமோகன் (வயது 23) என்ப வர் தமது வீட்டைப் பார்க்கச் சென்ற சமயமும் செவ்வாய் காலை தமது வலது கால்களை முழங் கால்களுக்குக் கீழ் இழந்தனர்.

இவர்கள் இருவரும் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கன்றுகள் தேவையா...?
நல்லின தக்காளி, கத்தரி, கொச்சி கன்றுகள் தேவையானோர் நாடவேண்டிய இடம். மன்று
தொ.பே.இல:- 22500
முற்பணம் கட்டி பதிவு செய்து கொள்ளவும்
100 - கன்றுகள் 40 ரூபாய் மட்டுமே
விவசாய வன வளத்தினைக்களத்தினால் பதிவு செய்யப்பட்ட இப்பண்ணைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
*தாளங்குடா பண்ணை -தொ.பே.இல : 46698
*பிள்ளையாரடி பண்ணை -தொ.பே.இல : 24091

கல்வி அபிவிருத்திச் சங்கம் நிப் ஆதரவுடன் பட்டிருப்பு வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நடாத்தப்பட்ட பயிற்சியின் ஆரம்ப விழாவில் பிரதம விருந்தினராக கே.இராசநாயகத்தை மாலை அணிவித்து வரவேற்பதையும். கலந்து கொண்ட முன்பள்ளி ஆசிரியர்களின் ஒரு பகுதியினை 2ம் படத்திலும். மாஸ்டர் சிவலிங்கம் கதை மூலம் கற்பிப்பதை 3ம் படத்திலும் காணலாம்.

பின்லேடன் கொல்லப்பட்டாலும் போர் நீடிக்கும் புஷ் – அறிவிப்பு
அரபு நாடுகள் மீது கடும் கோபம

(வாஷிங்டன், அக். 10)

பின்லேடன் கொல்லப்பட்டாலும் தீவிரவாதிகளுக்கு எதிரான யுத்தம் நீடிக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி புஷ் சபதம் செய்துள்ளார்.

ஆப்கான் மீது அமெரிக்கா 3-வது நாளாக தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த போர் தொடங்கிய பிறகு பின்லேடன் பேச்சை ஒளிபரப்பிய அரபு நாட்டு தொலைக்காட்சி மீது அமெரிக்கா கடும் ஆத்திரம் அடைந்துள்ளது. இது தீவிரவாதத்தை தூண்டி விடும் செயல் என்று அமெரிக்கா கருதுகிறது.

இந்த போர் குறித்து அமெரிக்க ஜனாதிபதி புஷ்சின் கருத்து என்ன என்பதை வெள்ளை மாளிகை அதிகாரி அரி பிளிஸ்சர் விளக்கினார். அவர் கூறியதாவது:- ஒசாமா பின்லேடன் நாளை சென்று விட்டாலும் (செத்து விட்டாலும்) தீவிரவாதத்துக்கு எதிரான போர் நீடிக்கும். இது பின்லேடனை மட்டும் குறி வைத்து நடைபெறும் போர் அல்ல. ஆரம்பத்திலேயே தீவிரவாதத்துக்கு எதிரான பிரசாரத்தை தனி நபரை அடிப் படையாக கொண்டு நடத்த வில்லை. 60 நாடுகளில் தீவிரவாதம்

உலகில் தீவிரவாத நெட் வொர்க் 60 நாடுகளில் உள்ளது. அவர்கள் அமெரிக் காவுக்கும் உல கின் பிற நாடுகளுக்கும் மிரட்டல்



விடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தீவிரவாதத்துக்கு எதிரான போரில் வெற்றி பெறுவதற்காக பலமுனைகளில் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பாக். ஆர்ப்பாட்டம் பற்றி..

பாகிஸ்தானிலும் பிற நாடுகளிலும் ஆப்கான் மீது நடத்தப்படும் தாக்குதலை ஆட்சேபித்து போராட்டம் நடந்து வருவது பற்றி கேட்டதற்கு, இந்த ஆர்ப் பாட்டங்கள் எல்லாம் எதிர்பார்த்தது தான். எதிர்காலத்திலும் இது போல் நடக்கத்தான் செய்யும். அமெரிக்கா தனது கூட்டு நாடுகளுடன் சேர்ந்து பாதுகாப்பும் ஸ்திரத்தன்மையும் ஏற்பட பாடுபடும் என்று வெள்ளை மாளிகை அதிகாரி கூறினார்.

மேலும் தீவிரவாத ஒழிப்பு சாசனத்தை ஜனாதிபதி புஷ் நிர்வாகம் அமுல்படுத்தும். இந்த சாசனம் என்பது தீவிரவாதிகளுக்கு ஆதரவு அளித்தும் அவர்களை உருவாக்கியும் வரும் நாடுகளும் தீவிரவாதிகளுக்கு ஏற்படும் கதியை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதாகும். எனவே இந்த சாசனம் நிறை வேற்றப்படும் என்று புஷ் கூறியிருப்பதாக வெள்ளை மாளிகை அதிகாரி கூறினார்.

இந்த சண்டை ஒரு வாரம் அல்லது ஒரு மாதம் வரை நீடிக்கும் என்று புஷ் நிர்வாகம் கருதுவதாக வெள்ளை மாளிகை வட்டாரம் மேலும் தெரிவித்தது.

ஆப்கான் தலைநகர் காபூல் மீது அமெரிக்காவின் பி-1 லான்சர் ரக விமானம் கிளஸ்டர் ரக குண்டுகளை போடும் காட்சி இந்த கிளஸ்டர் ரக குண்டுகள் ஒவ்வொன்றும் விட்டு விட்டு ஒவ்வொரு சமயம் வெடித்து எதிரிகளை திக்முக்காட வைக்கக்கூடியவை.

அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதலில் தலிபான் ராணுவ தளபதி பலி

(காபூல், அக். 10-)

ஆப்கான் தலைநகர் காபூல் மீது அமெரிக்க போர் விமானங்கள் நேற்று காலை சரமாரியாக குண்டுகள் வீசின. மூன்று பெரிய குண்டுகள் வெடித்ததில் நகரமே அதிர்ந்தது. தலிபான் விமானப் படை தளபதி மற்றும் ஒரு ராணுவ அதிகாரி பலியானார்கள்.

காபூல் நகரம் மீது நேற்று முன்தினம் தாக்குதல் நடத்திய அமெரிக்க போர் விமானங்கள் நேற்று அதிகாலை மீண்டும் தாக்குதலை தொடர்ந்தன. அதிகாலையில் காபூல் நகரில் 3 பெரிய குண்டுகள் வெடித்த போது நகரமே அதிர்ந்தது. எங்கும் புகை மூட்டமாக இருந்தது.

இந்த சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் கூறுகையில், காபூலில் அதிகாலையில் மக்கள் பிரார்த்தனைக்காக வந்து கொண்டிருந்தனர். அப்போது போர் விமானங்கள் காதை பிளக்கும் சத்தத்துடன் வட்டமடித்தன. உடனே விமான எதிர்ப்பு பீரங்கிகள் தரையில் இருந்து வானத்தை நோக்கி குண்டுகளை ஏவின ஆனாலும் வானில் வட்டமடித்த போர் விமானங்கள் குண்டுகளை சரமாரியாக பொழிந்தன. 3 பெரிய வெடிச்சத்தம் கேட்டபோது நகரமே படுபயங்கரமாக அதிர்ந்தது என்றார்.

இந்த பயங்கர குண்டு வீச்சில் தலிபான் விமானப் படையின் தளபதி ஒருவரும் மற்றும் ஒரு மேஜரும் பலியானார்கள். மற்ற சேதங்கள் பற்றி உடனடியாக தகவல் இல்லை.

அமெரிக்க விமான தாக்குதலுக்குப்பின் எடுக்கப்பட்ட காபூல் நகரின் படம் இது. பூமியில் இருந்து 432 மைல் உயரே விண்வெளியில் உள்ள இகோனஸ் என்ற செயற்கை கோள் மூலம் எடுத்தபடம் இது. காபூல் நகரின் வடக்கே உள்ள விமான நிலையம். வரிசையாக உள்ள குடியிருப்புகள், விவசாய நிலம் ஆகியவற்றை படத்தில் காணலாம்.

எதிர் தாக்குதல்

நேற்று மாலையில் காந்தகார் நகரம் மீது பறந்த 2 அமெரிக்க விமானங்கள் மீது தலிபான் படைகள் பீரங்கியால் சுட்டனர். இதையடுத்து அந்த விமானங்கள் குண்டு வீசாமல் திரும்பி சென்று விட்டதாக தலிபான் தகவல் தொடர்பு அமைச்சகம் தெரிவித்தது. ஆனால் காந்தகார் விமான நிலையத்தில் நேற்று மாலை 2 குண்டுகளும் ஹீராட் நகரில் பிற குண்டுகளும் விழுந்து வெடித்ததாக செய்திகள் கிடைத்தன.

ஆப்கானில் நடத்தப்படும் தாக்குதல் தொடர்பான தகவல்கள்

ஆப்கான் எல்லையை ஒட்டி உள்ள பாகிஸ்தானின் குயட்டா நகரில் அமெரிக்காவை எதிர்த்து நடந்த கலவரத்தில் 3 பேர் செத்தனர்.

*3 தலிபான் முக்கிய தலைவர்களை பாகிஸ்தான் கைது செய்தது.

*இந்தோனேசிய தலை நகர் ஜகர்தாவில் உள்ள அமெரிக்க தூதரகம் முன் முஸ்லிம்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் போலீஸ் துப்பாக்கி சூடு நடத்தினர்.

*மஸ்கட்டில் நேற்று நூற்றுகணக்கான மாணவர்கள் அமெரிக்க தாக்குதலை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

* ஆப்கான் மீதான அமெரிக்க விமான தாக்குதலுக்கு ஆதரவு தெரிவித்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில், பொதுமக்கள் பலியாவது குறித்து கவலையும் தெரிவித்துள்ளது.

*தஜகிஸ்தான் தனது நாட்டு விமான தளங்களை அமெரிக்கா பயன்படுத்த அனுமதி அளித்தது.

*தலிபானால் கைது செய்யப்பட்ட பிரிட்டன் பத்திரிகையாளர் ரிட்லே நேற்று விடுதலை செய்யப்பட்டு பாகிஸ்தான் சென்றார்.

* 2வது உலக போருக்கு ஒரு முதன்முறையாக அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு படை, ஆயுத போலீஸ்படை மற்றும் விமான நிலையங்கள், முழு அளவில் உஷார் படுத்தப்பட்டு உள்ளன.

பின்லேடன் தப்பியது எப்படி? ஏவுகணை தாக்குதலை நேரில் பார்த்தவர் தகவல்

அமெரிக்க ஏவுகணை தாக்குதலில் பின்லேடன், ஒமர் தங்கியிருந்த வீடு, முகாம்கள் இடிந்தன. ஆனால் இருவரும் தப்பி விட்டார்கள். இதை நேரில் பார்த்த தலிபான் ஆதரவு மத தலைவர் சராஞுஷாய் என்பவர் பாகிஸ்தானுக்குள் தப்பி வந்து கூறியிருப்பது தெற்கு ஆப்கானில் காந்தகாரில் உள்ள தலிபான் தலைவர் முல்லா முகமது ஒமரின் வீடு மீது குரிஷி ஏவுகணை விழுந்து தாக்கியது. ஒமர் வீட்டில் இல்லாததால் காயம் இன்றி தப்பி விட்டார்.

காந்தகாரில் உள்ள பின்லேடனின் மறைவிடம் அருகேயும், விமான நிலையமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவில் தாக்கப்பட்டன. ஆனால் அந்த நேரத்தில் பின்லேடனும் அந்த மறைவிடத்தில் இல்லை என்று ஒமர் என்னிடம் தெரிவித்தார். பாக்கியா, காஸ்ட், கார்டஸ் லோகார் போன்ற மாவட்ட களில் தலிபான் படைகள் குவிக்கப் பட்டு உள்ளன. அவர் களிடம் அமெரிக்க தயாரிப்பான ஸ்டிங்கர் ஏவுகணைகள், மற்றும் தரையில் இருந்து குறுகிய தூரத்தில் பாய்ந்து சென்று தாக்கும் ஏவுக ணைகள் உள்ளன. இவ் வாறு அவர் கூறினார்.

இந்த ஸ்டிங்கர் ஏவுகணைகளை அமெரிக்கா 1980-ல் ஆப்கான் கொரில்லா படைகளுக்கு வழங்கியது. அப்போது ரஷியா ஆக்கிரமிப்பை எதிர்த்து ஆப்கான் கொரில்லா படை போரிட்டது. ரஷியாவுக்கு எதிராக அன்று அமெரிக்கா சப்ளை செய்த ஸ்டிங்கர் ஏவுகணை இப்போது அமெரிக்காவுக்கே சவாலாக உள்ளது.

சிங்களச் சட்டமே இன்றைய இனப்பிரச்சினைக்கு காரணம்

(நமது நிருபர்)

நாடு இரண்டாகப் பிரிவதே சரி என்கிறார் பா.உ ஜோசப்

பிணைதிருத்தச்சட்டம் புதிதாக எதனையும் செய்வதாக இல்லை. குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் எவரையுமே பிணையில் விடுவிக்க முடியாது. பிணைதிருத்தச்சட்டமோ எந்த ஒரு செயல்ப்பாடும் அற்றதாகவே உள்ளது.

56ம் ஆண்டு சிங்களச் சட்டமே தற்போதைய இனப்பிரச்சினையினை பூதாகரமாக வளர்வதற்கு உரமூட்டியது.

தொடர்ந்தும் இவ்வாறே சென்று கொண்டிருந்தால் நாடு இரண்டாவதைவிட வேறு வழியில்லை.

இவ்வாறு நேற்றுக் காலை பாராளுமன்றத்தில் பிணைதிருத்தச்சட்டம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில் குடிவரவு குடியகல்வுச் சட்டத்தின்கீழ் 300 பேரும் பயங்கரவாதச் சட்டம், அவசரகாலச் சட்டம் போன்றவற்றில் சுமார் 1700 பேரும் விசாரணைகள் எதுவுமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எதுவுமின்றி களுத்துறை, கொழும்பு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளுக்கான வழக்கு விசாரணைகள் மட்டக்களப்பு, அம் பாறை ஆகிய இடங்களில் மேற் கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தில் மாத்திரமே அழைத்துவரப்படுகின்ற கைதிகள் மீண்டும் அச்சிறைகளுக்கே கொண்டு செல்லப்படுகின்றனர் என தெரிவித்த அவர் இந்நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும். விசாரணை மேற்கொள்ளப்படும் இடங்களிலேயே தடுத்து வைப்புக்களை மேற்கொள்வதன் மூலம் தாய் தந்தையர்களை பார்வையிடு வதற்கோ மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கோ இலகுவாக அமையும்.

அரசு அனைத்து விடயங்களிலுமே பாரபட்சம் காட்டுகின்றது. தமிழ் பாடசாலைகளின் சான்றிதழ்களுக்கு பல்கலைக்கழக அனுமதியின் போது 10 புள்ளிகள் மேலதிகமாக ஒதுக்கப்படுகின்றன. நாட்டை மதச் சார்பாக வைத்துக் கொண்டு ஒருபோதும் சமாதானத்தை அடைந்துவிட முடியாது எனக் கூறினார்.

கல்முனை தமிழ் பிரிவுக்கு பதிவாளர் நியமனம்

(காரைதீவு நிருபர்)

கல்முனை (தமிழ்) பிரதேச செயலகத்தில் கடந்த 03 வருடகாலமாக இல்லாதிருந்த மேலதிக மாவட்ட பதிவாளர் ஒருவரை நியமிக்க பதிவாளர் நாயகம் மீத்வர் ரத்னாயக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

கல்முனை (தமிழ்) பிரிவில் 3 வருடகாலம் மேலதிக மாவட்ட பதிவாளர் இல்லாமையும், 3 மாதகாலமாக காலங்கடந்த பிறப்பு, இறப்பு, திருமண சான்றிதழ்களைப் பெற முடியாமையினாலும் மக்கள் எதிர் நோக்கிய பிரச்சினைகளை அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ். யோகநாதன் எடுத்துக் கூறியதை படுத்தே இப்பதிவாளர் நியமிக்கப்பட் டுள்ளார்.

சனீஸ்வர சாந்தியாகம்

(நமது நிருபர்)

கல்லடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் 13.10.2001 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு சனீஸ்வர சாந்தியாகம் ஒன்று நடைபெற உள்ளது.

சனிபகவானின் பார்வையுள்ளவர்கள் விரதமிருந்து சனி பகவானை வழிபட்டு அருட்கடாட்சம் பெற வேண்டியே இந்த யாகம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்த யாக பூசையை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கருணாகரேஸ்வர சரேஸ்வரக் குருக்கள் நடாத்தி வைப்பார்.

ஆரையம்பதி வைத்தியசாலைக்கு நிதி ஒதுக்கீடு

(கணேசதாஸ்)

ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலையின் பிரேத அறையைத் திருத்தி அமைப்பதற்கென மட்/பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து நாற்பதாயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் திரு. எஸ்நீதிராஜன் தினக்கதிருக்குத் தெரிவித்தார்.

பிரேதப் பரிசோதனை செய்யக் கூடிய வசதிகள் குறைவாகக் காணப்பட்ட போதிலும் சில பிரேதங்கள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

பிரேத அறையின் குறைபாடுகள் பற்றி முன்னர் தினக்கதிரில் புகைப்படத்துடன் செய்தி வெளியாகியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

நவீன வசதிகளுடன் பாலர் பாடசாலை

(களுவாஞ்சிகுடி நிருபர்)

களுவாஞ்சிகுடியில் நவீன வசதிகளுடன் கூடிய பாலர் பாடசாலை ஒன்று அமைக்கப்பட உள்ளதாக பாலர் பாடசாலையின் பணிப்பாளர் எம். தயாபரன் தெரிவித்தார்.

சாயி சமித்தி கட்டிடத்திற்கும், ஓறியன்ற் கல்வி நிலைபத்திற்கும் இடையில் அமைக்கப்பட இருக்கும் இப்பாலர் பாடசாலைக்கான பூரண அனுசரணையை சாயி சமித்தி வழங்க உள்ளது.

ஆங்கில மொழிமூல, கம்பியூட்டர் போதனைகள் என்பன இப்பாலர் பாடசாலையில் நடைமுறைப்படுத்தபட இருப்பதாக தயாபரன் மேலும் தெரிவித்தார்.

இப்பாலர் பாடசாலைக்கு இளைஞர் அணி, பல அரசசார்பற்ற நிறுவனங்களும் உதவ முன்வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புலமைப்பரிசு பரீட்சையில் சித்தி

(ஆரையம்பதி கணேசதாஸ்)

இவ்வருடம் நடைபெற்ற 5ம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை காங்கேயனோடை பாடசாலைகளின் பெறுபேறுகள் விபரம்.

மட்/காங்கேயனோடை இஹற்றா வித்தியாலயம் என்.எம். நஸீம்-137, எம்.சி.பெளஷான்-133, ஏ.ஜி.பாயிக்-130 ஆகிய புள்ளிகளையும், காங்கேயனோடை ஹிஸ் புல்லா வித்தியாலயம் ஜே.ஆஜீர்-132, ஆர்.எம்.ரிஷான் 126, யு.சபீனி உனைஸ்-124 ஆகிய புள்ளிகளையும், காங்கேயனோடை அல்-அக்ஷா வித்தியாலயம் எம்.ரி.எம். சப்றாஸ்-129, ஏ.ஆர்.எம்.றுசைக்-127 புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் செல்வன் சிந்துஜன் ராஜேந்திரன் 151 புள்ளிகளைப் பெற்று சிறப்புச் சித்தி பெற்றுள்ளார்.

மட்/ஆரையம்பதி சிவமணி வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் வன்னியசிங்கம் ரிஷாந் இவ்வாண்டு நடைபெற்ற 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகளைப் பெற்று சித்திய டைந்துள்ளார்.

இதே வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி செல்வி சண்முகநாதன் சத்தியா 126 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கீழ் நந்நீர் மீன் வளர்ப்புக்கு நடவடிக்கை

(அதிரன்)

மட்டக்களப்பு மாவட்ட நந்நீர் மீன் வளர்ப்பினை விருத்தி செய்யும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட நீரக இனங்கள் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் அண்மையில் ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் மீன்வளர்ப்புக்கு உகந்தபல இடங்களைப் பார்வையிட்டனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள், மற்றும் மட்டக்களப்பு மாவட்ட நீரக இனங்கள் அபிவிருத்தி அதிகாரியுடன் சென்று பார்வையிட்டு, நந்நீர் மீன்வளர்ப்பிற்கென பல மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுவதாக உறுதியளித்ததாகவும், இதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த நன்மைகள் கிடைக்கும் என மஞ்சந்தொடுவாய், நாவலடி போன்ற பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

மீன், நண்டு, இறால் போன்ற நந்நீர் இனங்கள் வளர்ப்பது தொடர்பான ஏற்ற இடங்களை பார்வையிட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்து ஆலயங்களுக்கு ஒலிபெருக்கிகள் அன்பளிப்பு

(நமது நிருபர்)

வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நான்கு ஆலயங்களுக்கு கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சிப்பாராளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானா ஒலிபெருக்கிகளை வழங்கியுள்ளார்.

தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான இவ்வொலிபெருக்கிகள், வாழைச்சேனை கைலாயப் பிள்ளையார் ஆலயம், முறக்கொட்டான்சேனை காளிகோவில், பேத்தாளை பாலீஸ்வரர் ஆலயம், வடமுனை தபால் வழிப்பிள்ளையார் ஆலயம் ஆகிய நான்கு ஆலயங்களுக்கும் வழங்கப்பட்டன.

இவ்வைபவத்தில் வாழைச்சேனை பிரதேச செயலக உத்தியோகத்தர் எஸ்.தாமோதரம்பிள்ளை கல்குடா தொகுதி ஐ.தே.கட்சி அமைப்பாளர் என் பூபாலரெட்ணம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலான ஆகியோர் கலந்து கொண்டனர்.

கல்முனை தனியார் கல்வி நிலையம் தீக்கிரை

(எம்.எச்.நௌபீர்)

கல்முனைக்குடி ஜும்ஆப் பள்ளிவாசல் வீதியிலுள்ள மெமோ கல்வி நிலையம் திங்கட்கிழமை அதிகாலை இரண்டு மணியளவில் இனந்தெரியா தோரினால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

இருநூறிற்கும் மேற்பட்ட மாணவர்கள் மாலை நேர பிரத்தியேக வகுப்புக்களில் திறமையான ஆசிரியர்களைக் கொண்டு இந்நிலையத்தில் கல்வி கற்று வருகின்றனர். இக்கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்டு ஒருவருடம் பூர்த்தியடையும் நிலையில் இதன் ஆரம்ப காலம் முதல் தனிப்பட்ட காரண ங்களினால் இதனை மூடுவதற்கு சிலர் கடும் பிரயத்தனங்களை மேற் கொண்டு வந்ததாகவும் அது பலன ளிக்காத நிலையிலேயே இதனை மேற் கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையம் எரிக்கப்பட்டதனால் கிட்டத்தட்ட பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக இந்நிலையத்தினை நடாத்தும் எம்.வை.எம்.றிபாது தெரிவித்துள்ளார்.

கழுத்துப்பட்டி வழங்கும் வைபவம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மட்டிக்களி தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு புதிய கழுத்துப்பட்டியினை மட்டிக்களி கிராம அபிவிருத்திச் சங்கம் அறிமுகம் செய்து வைத்த வைபவம் அண்மையில் நடைபெற்றது.

கழுத்துப்பட்டிகளை கிராம அபிவிருத்திச் சங்கம் இலவசமாக வழங்கியது. இவ்வைபவத்தில் கிராம சேவையாளர் அ.நேசதுரை, மட்டிக்களி சுவாமி விவேகானந்தா சனசமூக நிலைய தலைவர் கு.நாகராசா, கதிரவன் இளைஞர் கழக தலைவர் சு.ரவிசங்கர் கலந்து கொண்டார்.

மட்டக்களப்பு புனிதமிக்கேல்கல்லூரி ஆரம்பப்பிரிவில் குருளை சாரணர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் அண்மையில் நடைபெற்றபோது கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ஜேம்ஸ் பீரிஸ் சின்னம் சூட்டுவதையும், அருகில் கல்விக் கல்லூரி கட்டுறு பயிற்சி ஆசிரியை செல்வி ரி.நளாயினி அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படமும் தகவலும் வேதாந்தி)

கணிதம்

க.பொ.த (சா-த) - 2001

எண் தொடர் – 1

வே.தவராஜா,
மட்/ புனித மிக்கேல்,
கல்லூரி

ஒரு வரையறுக்கப்பட்ட விதிக்கு அமைய, அமைக்கப்பட்ட எண்களின் தொடர்ச்சி எண் தொடர் எனப்படும்.

அத்தொடரிலுள்ள ஒவ்வொரு எண்ணும் தொடரின் உறுப்பு எனப்படும்.

1.1 கூட்டல் விருத்தி.

i. 4,7,10,13,16,.....

ii. 30,23,16,9,2,.....

iii. 2¼, 1½,3/4,0,-3/4,-1½.....

மேலேயுள்ள ஒவ்வொரு எண் தொடரிலும் அடுத்துள்ள இரண்டு உறுப்புக்களை எழுதுங்கள்.

அவ்வாறு எழுதும் போது மேலேயுள்ள எண் தொடர்களின் கோலத்தைக் கண்டுபிடிக்கலாம்.

1வது எண் தொடரில்

முதலுறுப்பிலிருந்து 3ஐக் கூட்ட அடுத்துள்ள உறுப்புக்கள் உருவாகும்.

2இல் முதலுறுப்பிலிருந்து (-7) ஐக் கூட்ட அடுத்துள்ள உறுப்புக்கள் உருவாகும்.

3இல் (-3/4) ஐக் கூட்ட உறுப்புக்கள் உருவாவதைக் காணலாம்.

ஒரு எண் தொடரிலுள்ள ஒவ்வொரு உறுப்பும் அதற்கு முன்னாலுள்ள உறுப்பை விட ஒரு நிலையான கணியத்தால் அதிகரிக்குமாயின் அத் தொடர் கூட்டல் விருத்தி என அழைக்கப்படும்.

சுருக்கமாக கூ.வி எனப்படும்.

1.2 பொது வித்தியாசம்.

அடுத்து வரும் இரண்டு உறுப்புகளில் அடுத்துள்ள உறுப்பிலிருந்து அதற்கு முன்னுள்ள உறுப்பைக் கழிக்க வரும் பெறுமானம் அக் கூட்டல் விருத்தியின் பொது வித்தியாசம் எனப்படும் இதன் குறியீடு d

(உ-ம்)

4,7,10,13.....

7 - 4 = 3

10 - 7 = 3

13 - 10 = 3

இங்கு பெறப்பட்ட வித்தியாசம் பொது வித்தியாசம் எனப்படும்.

பின்வரும் கூ/வி இன் பொது வித்தியாசத்தைக் காண்க.

1. 6,11,16,.....

∴ d = 11 - 6 = 5

2. 4,3.9,3.8,.....

d = 3.8 - 3.9

= -0.1

1.3கூட்டல் விருத்தி அமைத்தல்.

முதலுறுப்பும், பொது வித்தியாசமும் தரப்பட்டால் கூ/வி ஐ அமைக்கலாம்.

(உ-ம்)

மு/உ = 7

பொ/வி = 5

கூ/வி

7,12,17,22,.....

1.4 பொதுவான கூ/வி ஐ அமைத்தல்.

முதலுறுப்பு = a

பொ/வி = d

∴ விருத்தி

a, a+d, a+2d, a+3d,.....

1.4 கூ/வி ஒன்றின் விருப்பமான உறுப்பைக் காணல்.

(உ-ம்)

3,5,7,9,.....

இவ்விருத்தியின் 10ம் உறுப்பைக் காண்க.

இக் கூ/வி பத்து உறுப்புக்கள் வரை எழுதியே 10ம் உறுப்பைக் காணலாம்.

3,5,7,9,11,13,15,17,19,21,.....

இங்கு 10ம்உறுப்பு = 21

இவ்வாறு உறுப்புக்களைக் காணும் சிரமத்தைப் போக்க பொதுவான வாய்ப்பாடு ஒன்றைப் பெறுவோம்.

1.5 ம் உறுப்பைக் காணும் வாய்ப்பாடொன்றைப் பெறல்.

a, a+d, a+2d, a+3d,.....

1ம் உறுப்பு $T_1 = a$

2ம் உறுப்பு $T_2 = a+d$

3ம் உறுப்பு $T_3 = a+2d$

4ம் உறுப்பு $T_4 = a+3d$

இதற்குள்ளே இருக்கக் கூடிய கோலத்தை அவதானித்துப் பொதுவான வாய்ப்பாடைப் பெறுவோம்.

$T_1 = a = a+(1-1)d$

$T_2 = a+d = a+(2-1)d$

$T_3 = a+2d = a+(3-1)d$

$T_4 = a+3d = a+(4-1)d$

.....

இவ்வாறே nம் உறுப்பு

$Tn = a+(n-1)d$

∴ தேவையான உறுப்பைக்காணும் பொதுவான சமன்பாடு

$Tn = a+(n-1)d$

(உ-ம்)

1 7,11,15,19,.....

இவ் விருத்தியில் 12ம் உறுப்பைக் காண்க.

a= 7 d = 4 n = 12 T_{12}=?

$T_n = a+(n-1)d$

$T_{12} = 7+(12-1)x4$

$= 7+11x4 = 7+44$

$= 51$

∴12ம் உறுப்பு = 51

2. 30,23,16,9,.....

இவ்விருத்தியில் 15ம் உறுப்பைக் காண்க.

a = 30 d = -7 n = 15 T_{15} = ?

$T_n = a+(n-1)d$

$T_{15} = 30+(15-1)x(-7)$

$= 30+14x(-7)$

$= 30+(-98)$

$= -68$

3. ஒரு கூ/வி இன் 4ம் உறுப்பு 23, பத்தாம் உறுப்பு 110 ஆகவும் இருப்பின் அத்தொடரின் முதலாம் உறுப்பையும், பொ/வி ஐயும் கண்டு 16ம் உறுப்பைக் காண்க.

தீர்வு

மு/உ = a பொ/வி = d என்க.

$a+3d = 23$ ——— ①

$a+9d = 110$ ——— ②

① - ② ⇒ $-6d = -87$

$\therefore d = \frac{87}{6} = \frac{29}{2} = 14\frac{1}{2}$

$d = 14\frac{1}{2}$ ஐ சமன்பாடு 1 இல் பிரதியீட

$a+3x\frac{29}{2} = 23$

$\therefore a = 23-\frac{87}{2} = -20\frac{1}{2}$

(தொடரும்)

தினக்கதிர் ஆசான்

இராவணனின் இலங்காபுரி நகர் ஈழத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்திருந்தது

ஆய்வார் வலர்
நா.நவநாயகமூர்த்தி

(நேற்றைய தொடர்ச்சி)

இயக்கர் பெருமளவில் வாழ்ந்து வந்த மஹியங்கனையில் இவர் கோணக்கென தேவநம்பியதீசன் ஒரு தாக்கபையை நிறுவினான என (பண்டைய ஈழத்தமிழர் பக்.46 நா. நவநாயகமூர்த்தி-1998) அறியமுடிகின்றது.

இவ்வேளையில் திசமாற கமயில் நாகர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட நாக மகாவிகாரையே பிற்காலத்தில் திஸ்ஸமகா விகாரை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. திசை, திசையன் என்பது நாகர்களின் கௌரவப் பெயர்களாகும்.(திரு.ம.க.அந்தனி சில் - 1993) இக்காலத்தில் இத்தீவில் பண்டைய திராவிடமாகிய தமிழ் மொழியுடன் இதன் கிளைமொழியான 'எலு' மொழியும் முன்னிலை பெற்றிருந்தது. மேலும் பௌத்த சமயம் பரவுவதற்கு முன்பே பிராமணர் மூலமாக இங்கு அறிமுகமான பிராகிருத மொழியின் செல்வாக்கும் இக்காலத்தில் மிகுந்திருந்தது.

கி.மு.மூன்றாம் நூற்றாண்டு தேவநம்பிய தீசன் காலத்திலும், இதனைத் தொடர்ந்து பிற்காலத்திலும் பூர்வ குடியினரான நாகர், இயக்கர் என்போர் ஈழ அரசியலில் ஓரளவு முக்கியத்துவம் பெற்றிருந்தனர் எனலாம். குறிப்பாக வட இலங்கையில் நாகர்களின் அரசு கி.பி நாலாம், ஐந்தாம் நூற்றாண்டு வரையும் நிலைத்திருந்ததை ஆய்வுகள் உணர்த்துகின்றன. இக்காலத்தில் அனுரதபுரிக்கும் வட இலங்கைக்குமிடையில் நிலவி வந்த நெருக்கமான உறவுகள், பெரும்பாலும், சமய கலாசார உறவுகளாகவே இருந்து வந்துள்ளன என்பது மறைக்கப்பட்ட வரலாற்று உண்மையாகும்.

வட இலங்கையில் 'கந்த ரோடை' யைத் தலைநகராகக் கொண்டிருந்த நாகர்களது அரசு உன்னத நிலையிலிருந்து அக்காலத்தில் கி.மு.இரண்டாம் நூற்றாண்டளவில் எல்லாளன் (கி.மு 145-101) என்ற தமிழ் மன்னன் அனுராதபுரியை ஆட்சி புரிந்தான்.

இவன் சோழ நாட்டிலிருந்து, படையெடுத்து வந்து அசேலன் என்பவனை வெற்றி கொண்டு அனுரதபுரியை கைப்பற்றி இலங்கையில் நாப்பத்தி நாலு வருடங்கள் நல்லாட்சி புரிந்தான் என மகாவம்சம் சம்(அத்.21:செய்13 - 15) கூறுகின்றது. இவனது காலத்தில் முப்பத்திரண்டு தமிழ் சிற்றரசர்கள் உரோகண சிற்றரசின் வடபால் ஆட்சி புரிந்துனர் என அறிய முடிகிறது.

அனுரதபுரியில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னனான எல்லாளன் வட இலங்கையான நாக தீபத்தில் ஆட்சி புரிந்த சிற்றரசர்களில் ஒருவனானவான். இவன் நாக தீபத்திலிருந்து படையெடுத்து வந்து அனுரதபுரியைக் கைப்பற்றி ஆட்சி புரிந்தான் என்பதே ஆய்வுகள் மூலமாக பெறப்பட்ட வரலாற்றுண்மையாகும். இவனது காலத்தில் துட்டகாமினியின் ரோகன அரசின் வடபால் ஆட்சி புரிந்த முப்பத்திரண்டு தமிழ் சிற்றரசர்கள் பற்றி மகாவம்சம் (XXV: 75 கைகள் பதிப்பு 1986-பக்.175) குறிப்பிடுகின்றது. இவர்களுள் பலர் இந்துக்களாகவும் இருக்கலாம்என கலாநிதி.சி.க. சிற்றம்பலம் (சிந்தனை தொகுதி II, இதில்I- 1984) குறிப்பிடுகின்றார்.

இந்த முப்பத்திரண்டு அரசர்களுள் இயக்கர் குலத்து அரசர்களும், நாகர் குலத்து அரசர்களும் அடங்குவர். ஆயினும் இவர்கள் அனைவரையும் தமிழ் அரசர்கள் என்றே மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இவ் வேளையில் மஹியங்கனையில், சாத்தன் என்ற தமிழனும், அம்பாதித்த (அம்பாதோட்டம்) என்ற பிரதேசத்தில் தித்திம்பன் என்ற வலிமை மிக்க தமிழ் அரசனும் ஆட்சி செலுத்தி வந்ததாக மகாவம்சம் (அத்.25: செய்யு.7-9 தமிழாக்கம் எஸ்.சங்கரன் - 1962) குறிப்பிடுகின்றது. இவர்கள் இருவரும் இயக்கர் குலத்து சிற்றரசர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எல்லாளனுக்குப் பின்னர் அனுரதபுரியிலிருந்து ஆட்சி புரிந்தவனும், பண்டைய ஈழத்து பெரு மன்னர்களுள் ஒருவனுமான துட்டகாமினி, கல்யாணப்புரத்து (கல்யாணி) நாகவம்ச வழித்தோன்றலாவான் அவனின் தாயான விகாரமாகதேவி முன்னைய கல்யாணபுர நாக வேந்தனின் வம்ச வழியை சேர்ந்த களனி தீசனின் மகள் ஆவார். (யப்னா அன் த சிங்கள் ஹெறிட்டேஜ், கொழும்பு- 1984, பக் 3) எனஅறிய முடிகின்றது.(ம.க.அ.அந்தனி சில்-1993) கி.பி.முதலாம் நூற்றாண்டளவில் வட இலங்கை (நாகதீபத்தை)யை கொட்டாயன் என்ற நாகர் குல மன்னன் ஆட்சி புரிந்துள்ளான்.

இவ்வேளையில் (கி.பி.1ம் நூ)திருகோணமலையில் அதிகாரம் செலுத்தி வந்த கொட்டியன் என்ற நாகர் குல சிற்றரசன் பற்றி மட்டக்களப்பு மான்மியம் (பக்24) குறிப்பிடுகின்றது. வசபன் (கி.பி.127-171) அனுராதபுரியை ஆட்சி புரிந்த வேளையில் நாக தீபத்தை இசிகிரியன் என்பவன் ஆட்சிபுரிந்ததாக வல்லிபுரத்தில் கிடைத்த பொற் சாசனம் குறிப்பிடுகின்றது. (ஈழத்தவர் வரலாறு பக் 11 கலாநிதி க.குணராசா - 1996) இவன் நாகர் குல மன்னனாவான். பிராமி எழுத்தினாலான வல்லிபுர தங்கத்தகடு சாசனத்தில் நாகதீவு என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது அச்சாசனத்தில் தமிழ், பிராமி எழுத்துக்களையும்,அசோக பிராமி எழுத்துக்களையும் காணமுடிகின்றது. (ம.க.அ. அந்தனிசில்-1993)

பண்டைய நாகதீபம், தற்கால அனுரதபுரத்துக்கு வடபால் அமைந்துள்ள ஈழத்தின் பகுதியையும்,புத்தளம் மாவட்டம் வரை தெற்கே இது பரந்திருந்ததெனவும் அறிஞர் கருதுவர். நாகதீப பிராந்தியத்தில் வரும் பொம்பரிப்பு (புத்தளம் மாவட்டம்) மாந்தை (மன்னார் மாவட்டம்), ஆனைக்கோட்டை (யாழ் மாவட்டம்) ஆகியன அடங்கும். (கலாநிதி சி.க.சிற்றம்பலம் - 1983) எனலாம். மட்டக்களப்பு ஏறாவூருக்கு அண்மையில் காசி மோட்டையில் கண்டு பிடிக்கப்பட்ட பிராமி எழுத்திலான கல்வெட் டொன்றில் கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் கிழக்கில் தேவ நாகன் ஆதிக்கம் புரிந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. (இல.48 இன்ஸ் கிறிப் சன்ஸ் ஒப்சிலோன், தொகுதி 1, பகுதி 1) இவன் நாகர் குலத்தவனாவான்.

இவ்வாறு வரலாற்று காலத்திலும் வரலாற்றுக்கு முற்பட்ட ஆதிகாலத்திலும், பிற்காலத்திலும் இத்தீவில் நாகரீகச் சிறப்புடன் வாழ்ந்து வந்த பூர்வகுடியினரான நாகர், இயக்கர், ஆகியோரை சிங்கள வரலாற்றாசிரியர்கள் மனி தர்களாக ஏற்கத்தயாராக வில்லை. மகாவம்சம் குறிப்பிடுகின்ற நாகர், இயக்கர் என்போர் மனித வர்க்கத் தினரைக் குறிக்கவில்லை என்று ஜி.சி.மென்டிசும் (The Earl History Of Ceylon P.8 - 1946) மகாவம்சத் திலும், மணிமேகலையிலும் நாகர் ஒரு போதும் மனித வர்க்கத்தின ராகக் காட்டப்படவில்லையென திரு. பரணவிதான அவர்களும் கூறியுள்ளனர். விஜயனின் வருகையுடனே யே இலங்கையில் மக்கள் குடியேற்றங்கள் ஆரம்பமாகின என்பதை வலியுறுத்துவதற்காகவே இத்தீவின் மூதாதையினரை அமானுஸ்யர்கள் என இவர்கள் வலியுறுத்துகின்றனர் என எண்ணத் தோன்றுகின்றது. (ஈழத்தவர் வரலாறு பக் 11 கலாநிதி க.குணராசா - 1996)

நாகர்கள், நகர நாகரீகமொன்றை வளர்த்தமைத்த தலைவர்களாவர். இவ்வாறு டாக்டர் துரை அரங்கசாமி(சங்ககால சிறப்பு பெயர்கள் பக்.84) குறிப்பிடுகின்றார். கி.மு.நாலாம் நூற்றாண்டில் பாண்டுகாபயன் (377-307) அனுரதபுரியில் முதன் முதல் அரசை நிறுவிய வேளையில் அங்கு நாகர்களின் பழைய நகரம் இருந்ததாக எச்.பார்க்கர் தனது நூலில் (Aricient Ceylon P.16 - 1909) குறிப்பிடுவதையும், நோக்கலாம் ஆதிகாலத்தில் நாகர் தென்புலத்திலும் இலங்கையிலும் பரவியிருந்தனர்.ஆரிய மொழி பேசிய மக்கள் வட இந்தியாவிலிருந்து இலங்கை சென்று குடியேறிய வேளை அங்கு இயக்கரும் நாகரும் வாழ்ந்திருந்தனர். இவ்வாறு அறிஞர் எஸ்.இராமகிருஷ்ணன் (இந்தியப்பண்பாடும் தமிழரும் பக் 21) அவர்கள் குறிப்பிடுகின்றார்.

(முற்றும்)

கருத்தரங்கு

இது உங்கள் பக்கம்

வாசகர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இப்பகுதி, பல்வேறு சமூக, அரசியல் மற்றும் கலை, இலக்கியங்கள் சார்ந்த விவாதங்களுக்காக திறந்து விடப்பட்டுள்ள ஒரு களமே. எனவே ஆக்கபூர்வமான பல விடயங்கள் சார்ந்தும் தங்களுடைய கருத்துக்களை அனைவருடனும் பகிர்ந்து கொள்ளலாம்.

யாரையும் நோகப்படுத்துவதற்காக நாம் கல்லெறிய வேண்டாம். அதேவேளை, குளத்தில் போட்ட கல்லாய் கருத்துக்கள் அமிழ்ந்து போகவும் வேண்டாம்.

வீரர் – வீராங்கனைகளின் போதைப் பழக்கம்

இந்திய தடகளத்துக்கு இது சோதனைக் காலம் என்றுதான் சொல்ல வேண்டும். இந்திய கிரிக்கெட் வட்டாரத்தை உலுக்கிய சூதாட்ட பிரச்சினை முடிவுக்கு வந்துவிட்ட நிலையில், இந்திய தடகள வட்டாரத்தில் போதைப் பழக்க பிரச்சினை தலை விரித்துள்ளது. வீரர்கள் மத்தியில் போதைப் பழக்கம் இருப்பதாக செய் திகள் வந்தாலும், யாரும் அதை அவ்வளவு சீரியசாக எடுத்துக் கொள்ளவில்லை.

ஆனால் கடந்த சில வாரங்களுக்கு முன்பு இந்திய ஜூனியர் வீராங்கனை ஷீமா அண்டில் போதைப் பழக்க பிரச்சினையில் சிக்கிய பின்னர்தான் இந்த விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ளது. கடந்த ஆண்டு நடந்த உலகக் கோப்பை தடகள போட்டியில் இந்தியாவுக்கு கிடைத்த ஒரே ஒரு தங்கப்பதக்கத்தையும் ஷீமா அண்டில்தான் வென்றார். ஆனால் ஒரு ஆண்டு இடை வெளிக்குப் பின்னர் இந்த தங்கப்பதக்கத்தை சர்வதேச தடகள சம்மேளனம் பறித்து விட்டது.

போதையில் சிக்கினார் ஷீமா

சம்பந்தப்பட்ட வீராங்கனையிடம் பரிசோதனை நடத்தியதில் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தை அவர் பயன்படுத்தி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இதற்காக ஷீமாவுக்கு தடை எதுவும் அறிவிக்கப்படவில்லை. தற்போது பதக்கம் மட்டும் பறிக்கப்பட்டுள்ளது. இந்த செய்தியால் மத்திய அரசே அதிர்ந்து விட்டது. உடனடியாக இது பற்றி தீவிர விசாரணை நடத்தியதில் மேலும் பல அதிர்ச்சியான தகவல்கள் வெளியானது.

கடந்த வாரம் மத்திய விளையாட்டு ஆணையம் (சாய்) அதிர்ச்சியான பட்டியல் ஒன்றை வெளியிட்டது. இந்த பட்டியலில் 36-க்கும் அதிகமான இந்திய வீரர்-வீராங்கனைகள் போதை மருந்து பயன் படுத்தி இருப்பதற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டு இருந்தது. இந்த தகவலை இந்திய தடகள சம்மேளனம் முற்றிலுமாக மறுத்துள்ளது. சாய் வசம் இருக்கும் பரிசோதனை சாதனங்கள் அத்தனையும் தரமற்றவை. அதனால்தான் இது போன்ற தவறான தகவல்களை சாய் வெளியிட்டு இருக்கிறது என்று இந்திய தடகள சம்மேளனம் மறுப்பு செய்தி வெளியிட்டுள்ளது. ஆனால் இவை அனைத்தும் ஏற்கும்படியாக இல்லை. மத்திய விளையாட்டுத் துறை அதிகாரிகளும் வீரர்களின் போதைப் பழக்கத்தை ஒத்துக் கொண்டுள்ளனர்.

பயிற்சியாளர்களே காரணம்

இது தொடர்பாக தமிழ்நாடு தடகள சங்கத்தின் செயலாளர் நீல சிவலிங்க சாமி தினகரனுக்கு சிறப்பு ப்பேட்டி அளித்தார். அதன் விவரம் வருமாறு:-

கேள்வி:-போதைப்பழக்கத்தில் தடகள வீரர்-வீராங்கனைகள் அதிகமாக சிக்குவது ஏன்?

பதில்:-தடகளம் என்பது தனிநபர் போட்டி. இதில் உலக அளவில் சாதிக்க வேண்டும் என்ற ஆசை இரு ப்பதால் இதுபோன்ற தவறான வழிகளில் வீரர்- வீராங்கனைகள் ஈடுபட்டு விடுகிறார்கள். சில பயிற்சியாளர்கள் தங்களுக்கு பெயர் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கூட வீரர்- வீராங்கனைகளை போதை பழக்கத்துக்கு ஊக்கப்படுத்து கிறார்கள். இதுதான் பெரிய வேதனையாக இருக்கிறது.

கேள்வி:-இத்தனை ஆண்டு காலத்துக்குப்பிறகு தடகளத்தில் போதை பழக்கம் அதிகமாகி இருப்பதற்கு காரணம் என்ன?

பதில்:-சமீபகாலமாக வெளிநாட்டு பயிற்சியாளர்கள் இந்திய வீரர் - வீராங்கனைகளுக்கு பயிற்சியாளர்களாக நியமிக்கப்பட்டனர். இதன் பிறகு தான் இந்திய வீரர்கள் மத்தியில் போதைப்பழக்கம் அதிகமாகி இருக்கிறது.

இரண்டு தங்கப்பதக்கங்களைப் பெற்றாலும் புதிய சாதனையை நிலைநாட்டிய மொரோக்கோ

ஒலிம்பிக் நினைவுகள்-35

(எம்.ஐ.எம்.முஸ்தபா)

23வது லோஸ் ஏன்ஜல்ஸ் ஒலிம்பிக் போட்டியில் மிகவும் பிரபல்யமாக அடிபட்ட பெயர் கால்லூயிஸ். இவர் இந்த ஒலிம்பிக்கில் மெய்வல்லுநர் நிகழ்ச்சிகளில் நான்கு தங்கப்பதக்கங்களைப் பெற்று புகழ் பெற்றார். இவர் அமெரிக்காவைச் சேர்ந்த நீக்ரோ வீரர். பெர்லின் ஒலிம்பிக்கில் அமெரிக்க நீக்ரோவீரர் ஜெசி ஒவுன்ஸ் 4 தங்கப்பதக்கங்களை மெய்வல்லுநர் நிகழ்ச்சிகளில் பெற்றிருந்தார். அதேபோல் கால்லூயிசும் அதே நான்கு நிகழ்ச்சிகளிலும் வெற்றிபெற்று தங்கப்பதக்கங்களைப் பெற்றுக் கொண்டார். 100மீ, 200மீ, நீளம்பாய்தல், 4x100 மீ அஞ்சல் ஆகிய நிகழ்ச்சிகளில் கால்லூயிஸ் வெற்றி பெற்றார். 100 மீ தூரத்தை 9.9 செக்கனிலும், 200 மீ தூரத்தை 19.80 செக்கனிலும் ஓடிய கால்லூயிஸ் நீளம் பாய்தலில் 8.54மீ தூரத்தைப் பாய்ந்தார். தனது சகாக்களான சாம்நிரடி, ரொன்பிரவுன் கல்வின்ஸ்மித், ஆகியவர்களோடு சேர்ந்து 4x100 மீ. அஞ்சலை 37.83 செக்கனில் ஓடி முடித்தார். இதில் 200 மீ, 4x100 நிகழ்ச்சிகளில் புதிய ஒலிம்பிக் சாதனை ஏற்படுத்தப்பட்டன. மற்றுமொரு அமெரிக்க நீக்ரோ வீராங்கனையான பிரிஸ் கோஹீக் 200மீ, 400மீ, 4x400 அஞ்சல் நகிழ்ச்சிகளில் கலந்து வெற்றியீட்டினார்.

லோஸ் ஏன்ஜல்ஸ் ஒலிம்பிக் மொரோக்கோவைப் பொறுத்தவரை ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஒலிம்பிக் ஆகும். இரண்டு தங்கப்பதக்கங்களை இந்நாடு பெற்றுக் கொண்டதுமல்லாமல் வெற்றி பெற்றவீரர்கள் இருவரும் இரண்டு புதிய ஒலிம்பிக் சாதனைகளை ஏற்படுத்தியிருந்தார்கள். பெண்களுக்கான 400மீ சட்ட வேலி நிகழ்ச்சியில் மொரோக்கோ வீராங்கனை நவால் எல்மெதவக்கில் வெற்றியீட்டி புதிய ஒலிம்பிக் சாதனையை ஏற்படுத்தினார். இந்த வெற்றிச் செய்தியை அறிந்த மொரோக்கோ மன்னர் ஹசன் உடனடியாக தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தனது வீரர்களுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டார். வீராங்கனை மைதா வாக்கில் உடற்கல்வி மாணவி 54.61 செக்கனில் ஓடி சாதனை ஏற்படுத்தினார். இந்த நிகழ்ச்சியில் இந்திய வீராங்கனை பி.ரி.உசா கலந்து கொண்டு 4வது இடத்தைப் பெற்றார். 2ம், 3ம் இடங்களை அமெரிக்க, ரூமேனிய வீராங்கனைகள் பெற்றனர்.

மற்றுமொரு மொரோக்கோ வீரரான சகீத் ஒயுட்டா 5000 மீ போட்டியில் வெற்றியீட்டி புதிய ஒலிம்பிக் சாதனையை ஏற்படுத்தினார். றோமில் இடம் பெற்ற சர்வதேசப் போட்டி ஒன்றில் இவர் 5000மீ நிகழ்ச்சியில் 12 நிமி 58.39 செக்கனில் ஓடி உலக சாதனையை ஏற்படுத்தினார். இத்தூரத்தை 13 நிமிடம் குறைவாக ஓடிய முதலாவது வீரர் இவராகும்.

இங்கிலாந்து எதிர் சிம்பாப்வே

(ஆர்.சேகரன்)

5 ஒருநாள் போட்டிக்கான குறுகிய கால சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு சிம்பாப்வே வருகை தந்துள்ள இங்கிலாந்து அணியினர் 1வது, 2வது ஒருநாள் போட்களில் வெற்றியீட்டி மிகவும் வலுவான நிலையிலுள்ளனர்.

3வது ஒருநாள் போட்டி விபரம்:-சிம்பாப்வே:(50) 261/8 அண்டி பிளவர்:142 ஹீத் ஸ்ரிக்: 56 அண்டி பிளவர், ஹீத்ஸ் ரிக் இருவரும் இணைந்து பெற்ற 7வது விக்கட் இணைப்பாட்ட ஓட்டம் ஓர் உலக சாதனை என்பதும் குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து (48.1) 265/5 விக்கட் இழப்பிற்கு பெற்றுக்கொண்டு தொடரில் (3-0) என்று முன்னிலை வகிக்கின்றனர்.

விளையாட்டுக்கழக நிருவாகிகள்

(நமது நிருபர்)

தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் விளையாட்டுக் கவுண்சிலின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் பல்கலைக்கழக விளையாட்டு போதனாசிரியர் காரியாலயத்தில் நடைபெற்ற போது பின் வருவோர் 2000/2001ம் ஆண்டிற்கான செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவாகினர்.

தலைவர்:-யு.எஸ்.சபீல், உதவித்தலைவர் ஜே.நிஹாஸ், செயலாளர் எம்.ஏ.எம்.மைஹிலர், உதவிச் செயலாளர் எம்.எல்.எம். தாஹிர், பொருளாளர் எம்.வை.எஸ். அறீபீன்.

மேலும் 16 நிருவாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

வாசகர் நெஞ்சம்

தமிழறிவுப் போட்டியில் மீரா பாலிகா மகாவித்தியாலயத்திற்கு அநீதி இழைக்கப்பட்டது

மேற்கூறிய விடயம் பற்றி கல்லூரி அதிபர் அல்ஹாஜ் எம்.எம்.எம்.மஹ்றூப் கரீம் அவர்களிடம் வினவியபோது, கல்வி அமைச்சு தமிழ்ப்பிரிவு வடக்குக் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அவர்களிடமிருந்து வந்த கடித அழைப்பிற்கு ஏற்பவே நாம் மாணவிகளைப் போட்டிக்கு கொழும்புக்கு அனுப்பினோம். சென்ற வருடம் எமக்கு வேண்டுமென்றே வடக்குக் கிழக்கு மாகாணத்தில் அநீதி இழைக்கப்பட்டது. இவ்வருடம் அதே நிலையை கல்வி அமைச்சு தமிழ்ப்பிரிவு கல்விப் பணிப்பாளர் செய்துள்ளாரா என சந்தேகிக்கின்றோம். திரு.அல்பிரட் அவர்களின் தொலைபேசி விளக்கத்தின்படி அவர் வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளாருக்கு பெக்ஸ் மூலம் அறிவித்துள்ளதாகவும் அவர்கள்தான் உங்களுக்கு அறிவிக்க வேண்டுமென்றும் கூறினார். நிகழ்ச்சி மாற்றம் பற்றிய பெக்ஸ் செய்தியை மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளாருக்கு பெக்ஸ் மூலம் 11.09.2001ல் 10/32 க்கு அனுப்பியதாக வடக்கு கிழக்கு மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம்.ஹனீபா அவர்கள் தொலைபேசி மூலம் தெரிவித்தார். மாகாண வலயக் கல்விப் பணிப் பாளர்களிடம் இந்த நிகழ்ச்சி நிரல் மாற்றம் பற்றி ஏன் எமக்கு அறிவிக் கவில்லையா? அறிவித்ததா? எனக் கேட்டு 983/24:9, 984/24ம் இலக்கப் பதிவுத்தபால் மூலம் கேட்டும், அதற்கான பதில் இதுவரை (29.09.2001) கிடைக்கவில்லை.

அகில இலங்கை ரீதியாக நடைபெறும் இப்போட்டிகளுக்கு நாம் கலந்து கொள்ளும் தமிழறிவுப் போட்டியில் பங்குபற்றும் 8 பாடசாலைகளுக்கும் நேரடியாகத் தொலைபேசி மூலமோ, தந்தி மூலமோ நிகழ்ச்சி மாற்றம் பற்றி அறிவித்திருக்கலாம். கல்வி அமைச்சு தமிழ்ப் பிரிவோ, அல்லது வடக்கு கிழக்கு மாகாணமோ ஏற்கனவே அனுப்பியது போன்று நிகழ்ச்சி மாற்றம் பற்றியும் அறிவித்திருக்க வேண்டும். இப்படி அறிவிக்காது இந்நிகழ்ச்சியை வைத்ததன் மூலம் நம்பிச் சென்ற எமது மாணவிகளும், ஆசிரியர்களும் ஏமாற்றப்பட்டு விட்டனர். பல போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கும், சிரமங்களுக்கும் மத்தியிலே சென்றவர்கள் உடல், உளத்தாக்கதிற்கு உட்பட்ட நிலையில் திரும்பி வந்துள்ளனர். அகில இலங்கை ரீதியாக நடைபெறும் இப்போட்டியில் எமது மாணவர்கள் தெரிவானால் அவர்களுக்கு பல்கலைக்கழக திரட்டுப் புள்ளிகளுடனும் சேர்த்து கணக்கிட்டு பல்கலைக்கழகத் தெரிவிற்கு உதவக்கூடிய இச் சந்தர்ப்பத்தை வேண்டுமென்று இல்லாமற் செய்தது மிகவும் வேதனைக்குரியது எனக் குறிப்பிட்டார்.

எனவே எமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு பரிகாரம் காணப்படல் வேண்டும். மீண்டும் அப்போட்டியை வைத்து நீதி கிடைக்க வழி செய்ய வேண்டும். உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட எமது மாணவிகளுக்கு நிவாரணம் கிடைக்க வேண்டும். இந்நிகழ்ச்சியால் எமது கல்லூரி மாணவிகள் மட்டுமல்ல. ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள், இப்பிரதேசப் பாடசாலைகள், இவ்வாறு ஒதுக்கப்பட்டதன் காரணமாக இப்பிரதேச மாணவர்கள், அதுவும் ஒரு முஸ்லிம் பாடசாலை என்ற ரீதியில் அகில இலங்கை முஸ்லிம்களும் இதற்கு சரியான நீதி கிடைக்க வேண்டும் என எதிர்பார்த்துள்ளனர்.

எனவே இவர்களின் ஆவலை நிறைவேற்ற சம்பந்தப்பட்டவர்கள் தீர்க்கமாக ஆலோசித்து சரி நீதி கிடைக்க வழி செய்ய வேண்டும். மாணவர்களுக்கு நீதி கிடைக்காது அநீதி இழைக்கப்பட்ட மாணவர்களின் நிலை எமது இலங்கைத் தீவில் மட்டுமல்ல. உலக நாடுகளிலும் எப்படிப் பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது என்பதை கவனத்திற் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் உரிய நீதி கிடைக்க வழி வகுப்பார்களாக.

தலைவர்,
ஏ.எச்.முஹம்மது ஜே.பி,
காத்தான்குடி-6.

உரியவர்களுக்கு உரிமை கிடைக்குமா?

நாட்டில் வீட்டு வசதியின்றி கஸ்டப்படும் ஏழைகள் வன்செயல் காரணமாக பாதிக்கப்பட்டோர் போன்ற பலதரப்பட்ட மக்களின் வாழ்விட வசதியை ஏற்படுத்தும் நோக்கில் மாவட்ட பா.உ, கட்சி அமைப்பாளர்கள் போன்றோரின் சிபார்சுப்படி பிரதேச பிரிவுகள் தோறும் பரவலாக ஏழைகள் இனம் காணப்பட்டு வீட்டு வசதி ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது. இதன்படி சென்ற 1998ம் ஆண்டு களுவாஞ்சிகுடி பிரதேச பிரிவுக்குட்பட்ட மகிழூர் கிழக்கு மகிழூர்முனை ஆகிய கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்கள் சகலவற்றுக்கும் வீடு கட்டி கொடுப்பதாகக் கூறப்பட்டு இதை சில ஒப்பந்தக்காரர்கள் கட்டி முடித்துக் கொடுத்துவிட்டனர். ஏனைய பலருடைய வீடுகள் அரைகுறையுடன் ஆரம்பநிலையிலேயே இன்றும் உள்ளது. இதையிட்டு இவ்வீட்டுக்குரியவர்கள் இவற்றோடு சம்பந்தப்பட்ட பலரிடம் முறையிட்டும் எவ்வித நடவடிக்கையுமின்றி ஏனோ தானோ என்ற நிலையில் இவர்களும் உள்ளனர். மேலும் இப்பிரதேச பிரிவில் சில கிராமங்களில் இவ்வீட்டுக்குரியவர்களுக்கு காசோலை மூலம் பணமாக கொடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆகவே மேற்படி வீட்டுக்கு பெயர் பதியப்பட்டு வீடும் ஆரம்பித்த நிலையில் நான்கு வருடங்களாக எதிர்பார்த்து ஏமாந்த இம்மக்கள் ஊருக்கும் பெயருக்கும் மாத்திரம் வீடு கிடைத்தது என்ற நிலைமாறி கிடைத்த இவ்வீட்டில் உண்மையாக உரிமையுடன் குடியிருக்க சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டும் என இம்மக்கள் சார்பாக தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆ.கெங்காசலம்,
மகிழூர் முனை.

தமிழ் மக்கள் மீது போர் தொடுக்கும் எந்த அரசாங்கத்தையும் வீழ்த்துவோம்

செல்வம் அடைக்கலநாதன்

(நமது நிருபர்)

எமது மக்கள் மீது தீர் வில்லாப் போரை நடத்திக்கொண்டிருந்த இந்த அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு நடவடிக்கை எடுத்து வந்தோம். அது இன்று கனிந்திருக்கின்றது.

எங்களைப் பொறுத்தவரையில் எமது மக்கள் மீது எந்த அரசு போர் தொடுத்தாலும் எமது நிலைப்பாடு இப்படித்தானிருக்கும் என ரெலோ கட்சியின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.



சிறிலங்காவில் புதிதாக அமையப்போகும் புதிய அரசு எமது இனப்பிரச்சினை சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வரவேண்டும். அமையப்போகும் அரசும் எமது மக்கள் மீது போரைத் தொடரு மானால் புதிய அரசாங்கத்தைக் கூட நாம் எதிர்க்கத் தயங்கமாட் டோம்.

இருந்தாலும் அமையப் போகும் புதிய அரசுக்கு பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் ஆதரவு அளிக்கலாமென எண்ணி யுள்ளோம்.

1. புலிகள் மீதான தடையை உடனடியாக நீக்க வேண்டும்.

2. போர் நிறுத்தமொன்றை உடனடியாக அறிவிக்க வேண் டும்.

3. வன்னி மீதான பொருளாதாரத் தடையை உடனடி யாக நீக்க வேண்டும்.

4. புலிகளுடன் உடனடி யாகப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்.

5. நோர்வே அரசின் உதவியுடன் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும்.

எனத் தெரிவித்தார்.

பொலிஸ் கான்ஸ்டபிள் காயம்

(ருத்ரா)

உழவு இயந்திரத்தில் பயணம் செய்த பொலிஸ் கான் ஸ்டபிள் ஒருவர் சறுக்கி விழுந்து படுகா யமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மா லை 5.00 மணியளவில் கல்குடா வாழைச்சேனை வீதியிலுள்ள சங்கிலிப்பாலமெனுமிடத்தில் இடம் பெற்றது.

கல்குடா பொலிஸ் நிலை யத்தைச் சேர்ந்த ஜெயந்த என்ப வரே காயமடைந்தவராவார். இவர் உடனடியாக பொலனறுவை மா வட்ட வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டார்.

பொய்யிலே.....

மே நேரத்திற்கு வேலை செய்யும் பழக்கமில்லை. நேரத்திற்கு வே லை செய்யாத ஒருவர் எப்படி சிறந்த நிருவாகியாக இருக்க முடி யும். எமது ஜனாதிபதி பற்றிய இந்த உண்மையை உலகத் தலைவர் கள் அனைவரும் அறிந்து வைத் திருந்தார்கள்.

ஜனாதிபதி மற்றவர்க ளுக்கு வேலை செய்ய இடமளிக் காது எல்லா வேலைகளையும் தானே செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் செயற்பட்டு எந்த வேலைகளையும் சரியாகச் செய்ய வில்லை.

சிறுநீரக மாற்றுச் சத்திர சிகிச்சை செய்ய வேண்டியது போ ன்ற நோயாளிகள் ஜனாதிபதி நிதியத்திலிருந்து பண உதவி கோ ரி வரும்போது ஜனாதிபதியின் இப் போக்கினால் அவர்களுக்கு மிகவும் காலதாமதமாகியே இக்காசோ லைகள் போய்ச் சேர்ந்தன. அவ் வாறு காசோலைகள் போய்ச் சேரும்போது ஏற்கனவே அந்த நோ யாளி இறந்திருப்பார்.

இந்த ஜனாதிபதி பொய் யிலே பிறந்து பொய்யிலேயே வாழ் ந்து கொண்டிருக்கிறார். அவரின் வாயிலிருந்து ஒருபோதும் உ ண்மை யே வருவதில்லை. அரசாங்கம் தவ றான போக்கில் சென் றுகொண் டி ருப் பதை உணர்ந்து நான் பிரதம மந்திரி மற்றும் முன்னாள் அமை ச்சர் ஜீஎல்.பீரிஸ் ஆகியோருடன் சென்று ஜனாதிதியிடம் அரசாங்கத் தைச் சரியான வழியில் இட்டுச் செல்லுமாறு கேட்டுக்கொண்டோம்.

என்றாலும் ஜனாதிபதி எமது கோரிக்கைகளுக்கு செவிமடு க்காமல் அழிவுப் பாதையிலேயே சென்று கொண்டிருக்கின்றார்.

அவருக்கு விடிவே இல் லை. இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையு ள 118 வாக்குகளுடன் நிட்சயமாக நாம் வெற்ற பெறு வோம்.

இன்றைய சூழ்நிலையி லாவது நியாயமாகவும், நேர்மை யாகவும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்ட கட் சித் தலைவருக்கு அரசாங்கம் அமைக்கும் உரிமைகளை ஜனா திபதி கொடுக்க வேண்டும். அவர் அவ்வாறு செய்யாவிட்டால் மேலும் பிரச்சினைகளையே எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

நாம் ஒரு குழுவாக ஐக் கிய தேசியக் கட்சியுடன் இணை ந்து நிட்சயம் பொதுத் தேர்தலைச் சந்தித்துப் பதவிக்கு வருவோம். இதை எவராலும் தடுக்க முடியாது" என்றார்.

ஒரு வயதுக்.....

அவ்வாறான நடைமுறை யைக் கையாளாது இழுத் தடிப் பு செய்கிறது.

இன்று நூற்றுக் கணக் கான தமிழ் மக்கள் சிறையில் வாடுகின்றனர். பலர் தங்கள் குழந்தைகளுடனும் சிறை வாசம் அனுபவிக்க வேண்டியுள்ளது. மற்று ம் சிலர் சிறைச் சாலைகளிலே குழ ந்தைகளைப் பிரசவிக்க வேண்டியு ள்ளது.

சிறைகளில் பிறக்கும் குழந்தைகளின் பிறப்பத்தாட்சி பத்திரத்தைக் கூட எடுக்க முடியாத நிலையுள்ளது. எனத்தடுத்து வை க்கப்பட்டடோர் தொடர்பாக கவனம் செலுத்தி விசாரணை செய்து விடுதலைக்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

தபால் அத்தியட்சகர் காரியாலய இடமாற்றத்திற்கு பள்ளிவாயல்கள் சம்மேளனம் எதிர்ப்பு

(நமது நிருபர்)

அக்கரைப்பற்றில் இயங் கிவரும் அம்பாறை கரையோர மாவட்டத்திற்கான அஞ்சல் அத்தி யட்சகர் காரியாலயத்தை அம்பா றைக்கு உடனடியாக இடமாற்றம் செய்யுமாறு அஞ்சல் மா அதிப ரினால் விடுக்கப்பட்டுள்ள உத்தர வுக்கு அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாயல்கள் சம்மேளனம் எதிர் ப்புத் தெரிவித்துள்ளது.

இந்த அஞ்சல் அத்தியட் சகர் காரியாலயத்தின் கீழ் தமிழ், முஸ்லிம் பகுதிகளில் 13 பிரதம தபால் நிலையங்களும், 50 உப தபால் நிலையங்களும் இயங்கி வருகின்றன.

இந்த தபால் நிலையங் களின் நலனைக் கருத்தில் கொண்டு அக்கரைப்பற்றில் கடந்த வருடம் யூலை மாதம் 27 ஆம் திகதி இந்த அஞ்சல் அத்தியட்சகர் காரியாலயம் திறக்கப்பட்டது.

இக்காரியாலயம் திறக்கப் பட்டு சுமார் ஒரு வருடமே இங்கு இயங்கியுள்ளது.

இக்காரியாலயத்தில் அஞ்சல் அத்தியட்சராக ஒரு தமிழ ரே கடமையாற்றி வருகின்றார்.

ஆனால் எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் இக்காரியாலய த்தை மூடிவிட்டு மீண்டும் அம்பா றையுடன் இணைக்குமாறு அஞ்சல் மா அதிபர் கடிதம் மூலம் அறிவித்து ள்ளார்.

இந்த அஞ்சல் அத்தியட் சகர் காரியாலத்தினை இடமாற்றம் செய்யக் கூடாதென அக்கரை ப்பற்று அனைத்துப் பள்ளிவாசல் கள் சம்மேளனம் ஜனாதிபதி மற்றும் தபால் தொலைத் தொடர்பு கள் அமைச்சருக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

இந்த அலுவலகம் அம் பாறைக்கு மாற்றப்படுமானால் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்யப்போவதா கவும் பள்ளிவாயல்கள் சம்மேள னம் அறிவித்துள்ளது.

கொள்ளைச் சம்பவம் தொடர்பாக முன்னாள் ஊர்காவல் படையினர் கைது

(அன்வர் அலி)

கந்தளாய்ப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்களில் கொள்ளைச் சம்பவங்களில் தொடர் புடையவர்கள் எனும் சந்தேக த்தின் பேரில் நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களில் மூவர் ஊர்கா வல் படையில் இருந்து விலகிய வர்கள் என பொலிஸார் தெரிவித் தனர்.

ரஜலெ,வட்டுக்கச்சி, சூரி ய வம்ச மாவத்தைப் போன்ற பகு திகளில் அண்மைக்காலமாக பல கொள்ளைச் சம்பவம் இடம் பெற்று வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குமார் பொன்னம்பலத்தின் கொலைச் சந்தேக நபர் பிணையில் விடுதலை

(நம்து நிருபர்)

குமார் பொன்னம்பலம் தொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலிலிருந்த பொலிஸ் உத்தி யோகத்தரை கொழும்பு மேல் நீதி மன்றம் நேற்று பிணையில் விடுத லை செய்தது.

சுகத் ரணசிங்க எனும் மேற்படி பொலிஸ் உத்தியோக த்தரை பிணையில் விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதிம ன்றத்தில் மனு தாக்கல் செய்திரு ந்தார்.

இது தொடர்பான விசா ரணை நேற்று மேல் நீதிமன்றத்தில் நீதியரசர் எல்.ஐ. இமாத் முன்னி லையில் நடைபெற்றதைத் தொட ர்ந்து எட்டாயிரம் ரூபா ரொக்கம் மற்றும் எட்டு இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் விடுதலை செய்ய ப்பட்டார்.

வெளிநாடு செல்வத ற்கான கடவுச் சீட்டு நீதிமன்றத்தால் மறுக்கப்பட்டுள்ளது.

கிறிக்கட் போட்டி

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மஞ்சந்தொ டுவாய் தொழில் நுட்பக் கல்லூ ரிக்கும், சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரிக்கும் இடையிலான சிநேகப் பூர்வ மென்பந்து கிறிக்கட் போட்டி இன்று வியாழக்கிழமை (11.10.2001) சிவானந்த வித்தியா லய மைதானத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் எம்.கதிர்காம நாதன் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார். என்பதை மாண வர் ஒன்றிய செயலாளர் எம்.ந க்கீரன் தெரிவித்தார்.

படுவான்கரையில்.....

கள், பொது மக்கள் வாகன ஊர் திகள் என சுமார் மூவாயிரத்துக்கு மேற்பட்ட பொது மக்கள் இப்பேர ணியில் கலந்து கொண்டனர்.

மாலை 4 மணிக்கு அரச டித்தீவு பொது விளையாட்டரங்கில் பொதுக் கூட்டமும் இளைஞர் யுவ திகளை இணைக்கும் வைபவமும் இடம் பெற்றன.

இக் கூட்டத்தில் மட்- அம் பாறை மகளிர் பிரிவு அரசியல் துறை பொறுப்பாளர் வானுஜா தலைமை தாங்கினார். வெல்லவெ ளி,பட்டிப்பளை, பிரிவுகளைச் சேர்ந் த நூற்றுக்கும் மேற்பட்ட பெற் றோர் தமது பிள்ளைகளை பொது மக்கள் முன்னிலையில் அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலனிடம் ஒப்படைத்தனர்.

இவ்விழாவில் மட் அம்பா றை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன் தளபதி ரமேஸ், கல்விப் பிரிவுப் பொறுப்பா ளர் துரை, நிதிப் பொறுப்பாளர் ஜெனசல்லியன், புலனாய்வுப் பொ றுப்பாளர் றமனன், விஜயன் மாஸ் டர் வழங்கல் பிரிவுப் பொறுப்பாளர் றொசான், மகளிர் மருத்துவப் பொறுப்பாளர் வான்மதி, உட்பட பலரும் கலந்து கொண்டதுடன் கவிதை, நடனம், நாடகம் உட்பட பல கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

குடும்பிமலை, திகிலி வட்டை, பெண்டுகள்சேனை, கரடியனாறு, வாகரை போன்ற இடங்களிலும் எழுச்சி நிகழ்வுகள் இடம் பெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வன்னி யிலும் திருமலை மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக ளிலும் பெண்கள் எழுச்சிப் நிகழ்வு கள் பரவலாக இடம் பெற்றுள்ளன.

திருமலை .....

செவ்வாய் இரவு 11.30 மணியளவில் மோட்டார் தாக்கு தலை நடத்தியதுடன் முகாமை நோக்கி முன்னேறிய போது விமா னப் படையினர் முகாமை விட்டு வெளியேறியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து முகாமுக்குள் நுழைந்த புலிகள் படையினரால் விட்டுச் சென்ற ஆயுதங்களை கைப்பற்றியதுடன் கட்டடங்களையும் முற்றாக அழித்துள்ளனர்.

இத்தாக்குதலில் ஆயுதங் கள் தாங்களால் கைப்பற்றப்ப ட்டதாக கூறி புலிகள் வெளியிட்ட ஆயுத விபரங்கள் பின்வருமாறு,

50 கலிபர்02, ஏ.கே.எல். எம்.ஜி.03, மோட்டார்01,ரி.56 2ரக துப்பாக்கி 2, 50 கலிபர் பரல்01, 50 கலிபர் முக்காலி 01, ஆகிய வையே கைப்பற்றப்பட்டவையாகு ம்.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்து மேஜர் பாபு என அழை க்கப்படும் தெய்வேய்ந்திரன் சிவகு மார், திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டாவது லெப்ரினட் சிவகுரு பத்மநாதன் ஆகிய இரு புலிகள் பலியானதாகவும் அறி வித்துள்ளனர்.

இச்சம்பத்தைத் தொடர் ந்து படையினர் தீவிர சோதனை நடவடிக்கைகளை மேற்கொண் டனர்.

கட்டுப்பாட்டுப்.....

ன் பதாதைகளும் காணப்பட்டன.

நேற்றுக் காலை வீதிக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் பொது மக்க ளை அழைத்து சுவரொட்டிகளை அகற்றுமாறு உத்தரவிட்டதுடன் பல இளைஞர்களை கடுமையாக விசாரணை செய்ததாகவும் தெரி விக்கப்படுகிறது.

இதேவேளை செவ்வாய் இரவு மைலவட்டுவான் பிரதேசத் தை நோக்கி படையினர் மோட்டார் தாக்குதலை நடத்தினர். கொம்மா துறை படை முகாமிலிருந்தே இந்த எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட் டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் சேத விபரங்கள் பற்றிய தகவல் வெளியாகவில்லை.

பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற 7909/எம்/97ம் இலக்க வழக்கின் தீர்வையின் பிரகாரம் நடுக்கட்டப்பட்ட அடிச்சட்ட இலக்கம் 610KT00050 க் கொண்ட "சிங்கர்" இன 29" வர்ண தொலைக்காட்சிப்பெட்டி 2001.10.24ம் திகதி பி.ப.2.30 மணிக்கு நீதிமன்ற வளவில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

"நீதிமன்ற ஆணைப்படி"

சா.சிவகுமார்,
பிரதிப் பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
மட்டக்களப்பு.

Advt

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.